பக்கங்கள்:-24

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | புரட்டாதி 23 | வியாழக்கிழமை | 09.10.2025 | அதிர்வு 069

ஐ.நாவின் புதிய தீர்மானம்;

## அநுர அரசு இன்று விசேட அறிக்கை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான புதிய தீர்மானம் 07





# மன்னாரில் காற்றாலை நிர்மாணப் பணிகளை தொடர முழு இணக்கம்

## ஜனாதிபதி - ஆயர் சந்திப்பில்



மன்னார் தீவில் புதிதாக 14 காற்றாலைகளை அமைப்பதற்கு எதிரான போராட்டம் மன்னாரிலும், பிற இடங்களிலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அந்தப் போராட்டங்களை இடைநிறுத்தி மேற்படி 14 காற்றாலைகளையும் தொடர்ந்து அமைப்பதற்கான இணக்கப்பாடு நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவுக்கும் மன்னார் ஆயர் வண. ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளைக்கும் இடையில் கொழும்பில் நடைபெற்ற சந்திப்பின்போது எட்டப்பட்டுள்ளது எனக் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன. 07

## மன்னார் கடற்பரப்புக்குள் நான்கு படகுகளில் அத்துமீறிய இந்திய மீனவர்கள் 30 பேர் கைது!

(ந.லோகதயாளன்)



இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டிய இந்திய மீனவர்கள் 30 பேர் நேற்று இரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தைச் சேர்ந்த மேற்படி மீனவர்கள் 4 படகுகளில் மன்னார் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டபோதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் இன்று அதிகாலை மன்னார் 07




இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எல்லாம் கடந்த உள்ளூராட்சித் தேர்தலை எதிரும் புதிருமாக – தனித்தனியாக நின்று – எதிர்கொண்டன.

தேர்தல் முடிந்ததும் உள்ளூராட்சி சபைகளின் தலைமைப் பதவிகளைக் கைப்பற்றுவதற்காக ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியும், சில பிற உதிரிகளும் கூட்டமைத்தன.

பதவியை – அதிகாரத்தை – கைப்பற்றுவதற்கான அரசியல் தந்திரிபாயக் கூட்டு என்பதால் அதை தவறு என்று சொல்ல முடியாது.

ஆயினும் அரசியலில் எதிரெதிர்த் தரப்புகளில் இருந்தோர் பதவிகளை கைப்பற்றுவதற்கான அணி சேரல் என்பதால் அதனை ‘சந்தர்ப்பவாதக் கூட்டு’ என விமர்சகர்கள் சிலர் கூறத் தவறவில்லை.

“இல்லை, இல்லை, அது கொள்கைக்கூட்டு” – என்று பிரகடனப்படுத்தினார் அதன் நடுநாயகமாக விளங்கிய தமிழ்த் தேசிய மக்கள் 07




# மின் கட்டண திருத்தம் குறித்து இறுதி தீர்மானம் எடுக்கவில்லை

## அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

மின் கட்டண திருத்தம் தொடர்பில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் பொது மக்களிடம் கருத்து கோரல் இடம்பெற்று வருகிறது எனவும் எனினும் கட்டண திருத்தம் குறித்து இறுதி தீர்மானம் எடுக்கப்படவில்லை என்றும் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.


கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"மின் கட்டணத்தை குறைப்பதை இலக்காகக் கொண்டே இலங்கை மின்சார சபையை நான்கு தொகுதிகளாக் குவதற்கான மறுசீரமைப்பினை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் மின் கட்டணம் தொடர்பில் இதுவரையில் இறுதி தீர்மானமொன்று எடுக்கப்படவில்லை. பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் இது குறித்து மக்கள் கருத்துக் கோரல் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

எவ்வாறான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்பதை ஆணைக்குழு இன்னும் அறிவிக்கவில்லை. எனவே மின் கட்டணம் குறைக்கப்படுமா அல்லது அதிகரிக்கப்படுமா என்பதை தற்போது கூற முடியாது. முதலீட்டாளர்கள் மற்றும் தொழிற்துறை சார்ந்தவர்களின் கோரிக்கைகளுக்கு அமையவே தீர்மானம் எடுக்கப்படும். எனவே தீர்மானம் எதுவாக இருந்தாலும், அது மின்சார ஊழியர்களுக்கு எந்த வகையிலும் பாதிப்பாக அமையாது.

அரசாங்கத்தின் தீர்மானங்களை ஏற்க முடியாதவர்களுக்கு நாம் ஏற்கனவே சில தெரிவுகளை வழங்கியிருக்கின்றோம். எனவே அரசாங்கத்தின் கொள்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாதவர்கள் வேறு தொழிலை தேடிக் கொள்ளலாம்." என்றார்.






# மத்தள ராஜபக்ஷ விமான நிலையத்தில் வனவிலங்கு திணைக்கள அலுவலகம்

அம்பாந்தோட்டையில் உள்ள மத்தள ராஜபக் ஷ சர்வதேச விமான நிலையத்தில் வனவிலங்குத் திணைக்களத்திற்கான ஒரு தனியான அலுவலகத்தை அமைக்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

விமான நிலைய வளாகத்திற்குள் காட்டு யானைகள் மற்றும் ஏனைய வன விலங்குகள் மீண்டும் மீண்டும் அத்துமீறிநுழைவதாலும்மற்றும்விமானநிலையத்தை அணுகும் வீதிகளை விலங்குகள் கடப்பதாலும் எழுந்த தொடர்ச்சியான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வனவிலங்கு அத்துமீறல்கள் விமான நிலையத்தின் உள்கட்டமைப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியதுடன், விமான நிலையத்தின் அன்றாட நடவடிக்கைகளுக்கும் பல தடையை ஏற்படுத்தின.

இதனால், விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்திற்கு கணிசமான பழுதுபார்ப்புச் செலவுகளும் ஏற்பட்டன.

புதிதாக நிறுவப்படும் இந்த அலுவலகம், வனவிலங்குகளின் நடமாட்டத்தை கண்காணிக்கவும் நிர்வகிக்கவும், அவற்றின் தாக்குதல்களைத் தடுக்கவும், பயணிகள், விமான நிலைய ஊழியர்கள் மற்றும் விமான நிலைய உள்கட்டமைப்பின் பாதுகாப்பை உறுதி செய்யவும் கவனம் செலுத்தும்.

இந்த நடவடிக்கை மூலம், விமான நிலைய நடவடிக்கைகளில் ஏற்படும் தாமதங்களைக் குறைத்து, தடையற்ற விமான சேவைகளைப் பராமரிக்க முடியும் என்று அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

# விந்தணு வங்கி மூலம் 10 பெண்கள் கர்ப்பம்

கொழும்பில் உள்ள காசல் வீதி மகளிர் மருத்துவமனையில் புதிதாக நிறுவப்பட்ட விந்தணு வங்கி மூலம் 10 பெண்கள் வெற்றிகரமாக கருத்தரித்துள்ளனர் என மருத்துவமனை பணிப்பாளர் அஜித் குமார தன்தநாராயன தெரிவித்தார்.

இந்த விந்தணு வங்கி நிறுவப்பட்டு சுமார் ஆறு மாதங்கள் ஆகின்றன.

இந்த வங்கியில் தானம் செய்பவர்களின் பல நோய்களுக்கான முறையான மருத்துவ பரிசோதனைகளை நடத்திய பிறகு, அவர்களின் விந்தணு வங்கியில் சேமிப்பில் வைக்கப்படுவதாக மருத்துவமனை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பின்னர் தந்தையர்கள் மீண்டும் தொடர்புடைய சோதனைகளுக்கு அழைக்கப்படுகிறார்கள் என்றும், அந்த சோதனைகள் மூலம் அவர்களின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்திய பிறகு, விந்தணு சேமிப்புக்கு தயார் செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும், இந்த காலகட்டத்தில் விந்தணுவை சேமிக்க திரவ நைட்ரஜன் பயன்படுத்தப்படுவதால், அதிக செலவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் தெரிவித்தார்.

மூன்று மாதங்களுக்குப் பிறகு பரிசோதனைக்காக மீண்டும்வரும் விந்தணுக்களை தானம் செய்யும் தந்தையர்களிடம் ஒரு குறிப்பிட்ட பலவீனம் இருப்பதாகவும், அதை உடனடியாகத் தடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இருப்பினும், கொழும்பு காசல் வீதியில் உள்ள மகளிர் மருத்துவமனையில், இந்த திட்டம் பெரும் வெற்றியைக் காண்பிப்பதாகவும், இந்த திட்டத்திற்காக பல கோரிக்கைகள் முன்வைக்கப்படுவதாகவும் தெரிவித்த அவர், ஏராளமான நன்கொடையாளர்களும் முன்வருகின்றனர் என்றும் தெரிவித்தார்.





# ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட வாகனங்களுக்கு இதுவரை இலக்கத்தகடு வழங்கப்படவில்லை

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க தகவல்

2025ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ஆம் திகதி வரை ஒரு லட்சத்து 65 ஆயிரத்து 512 வாகன இலக்கத்தகடுகள் வழங்கப்படவில்லை என போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

புதிய வாகன இலக்கத்தகடுகளை வழங்கும் பணியில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து நாடாளுமன்றில் வாய்வழி மூலக் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வாகன இலக்கத்தகடுகளை வழங்குவதில் நாம் திட்டமிட்டதை விட நீண்ட தாமதம் ஏற்பட்டுள்ளது.

புதிய இலக்கத்தகடுகளில் 7 சிறப்புப் பாதுகாப்பு அம்சங்கள் இருக்கின்றன.

இலங்கையில் இந்த 7 அம்சங்களைச் சோதனை செய்வதற்காக மொரட்டுவை பல்கலைக்கழகத்திடம் ஒப்படைத்தது.

ஆனால், அதற்குச் சுமார் மூன்று மாதங்கள் எடுத்துக் கொண்டதுடன், அவற்றில் ஆறு அம்சங்களை மட்டுமே நிறைவு செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, 7 ஆவது சோதனையைச் சர்வதேச அளவில் நடத்த வேண்டியிருந்தது. இதன் காரணமாகவே, இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளது.

புதிய சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினை எதிர்வரும் 18 ஆம் திகதிக்குள் தீர்க்கப்படும்." - என்றார்.



# சஷீந்திர வழக்குடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ தொடர்பான வழக்கில், ஊழல் மற்றும் குற்றவியல் முறைகேடுக்கு உதவினார் என கூறி, இழப்பீட்டு அலுவலகத்தின் முன்னாள் பதில் பணிப்பாளர் நாயகம் லஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

2022 ஆம் ஆண்டு அரகலய போராட்டத்தின் போது சேதமடைந்த மகாவலி அதிகாரசபை சொத்துக்கான இழப்பீட்டுச் செயல்பாட்டின் போது, முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவுடன் சதி செய்தார் என அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அந்த அதிகாரி, சஷீந்திர ராஜபக்ஷவுக்கு எதிரான லஞ்ச ஒழிப்பு விசாரணையில் இரண்டாவது சந்தேக நபராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அமைச்சுகளுக்குப் பரீட்சை

நாட்டில் அமைச்சரவை அந்தஸ்துள்ள 22 அமைச்சுகள் மற்றும் அந்த அமைச்சுகளின் கீழ் இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் ஆகியவற்றின் செயற்பாடுகள், பெறுபேறுகள், சாதனைகள், அடைவு மட்டங்கள் ஆகியவற்றை அளவீடு செய்வதற்காக அமைச்சுகளின் பெறுபேறுகளை அளவீடு செய்யும் திட்டமொன்றை அரசாங்கம் அறிமுகப்படுத்துகின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசாங்கத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டு முதல் 2029 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு அமைச்சும் வெளிப்படுத்தும் பெறுபேறுகளும் இந்த அடைவு மட்டத் திட்டத்தின் மூலம் அளவீடு செய்யத் தீர்மானிக்கப்பட்டு இருப்பதாகக் கூறப்படுகிறது.

திட்டமிடல் முகாமைத்துவ திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு திறைசேரியினால் கண்காணிக்கப்படும் இந்த நடவடிக்கையின் கீழ் தற்போதைய அரச நிர்வாகத்தினுடைய இலக்குகள், நோக்குகள், அபிவிருத்தி அடைவு மட்டங்கள் போன்றவை உரிய காலகட்டத்தில் எட்டப்பட்டுள்ளனவா என்பது அளவிடப்படும் என்று கூறப்படுகிறது.

இந்த முயற்சி அமைச்சகங்களுக்கு இடையே செயல்திறன், பொறுப்புக்கூறல் மற்றும் ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும், பொதுத்துறை திட்டங்கள் சரியான நேரத்தில் முடிவுகளை வழங்குவதை உறுதி செய்கிறது என்றும், அதே நேரத்தில் அரசாங்கம் தலைமையிலான முதலீடுகளில் பொதுமக்களின் நம்பிக்கையை அதிகரிக்கிறது என்றும் அரசு தரப்பில் கூறப்படுகின்றது.

அரச பொதுத்துறை முழுவதினதும் முடிவுகள் மற்றும் செயற்பாடுகள் சார்ந்த நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்வதை நிறுவனமயமாக்குவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க முன்வைத்த முன்மொழிவை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.

முகாமைத்துவ ரீதியிலான - அமைச்சுக்களின் அடைவு மட்டங்களைக் கண்காணிக்கும் - புதிய கட்டமைப்பு, ஒவ்வொரு அமைச்சினதும் வருடாந்திர செயல் திட்டம் மற்றும் வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டுடன் ஒருங்கிணைத்து பெறுபேறுகளை மதிப்பீடு செய்யும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆக, ஒவ்வொரு பாடசாலை மாணவனும் வருட முடிவில் தேர்ச்சி அறிக்கை (Report Sheet or Progressive Report) கொண்டு செல்வது போல ஒவ்வொரு அமைச்சும் மேற்படி கட்டமைப்பிடமிருந்து தேர்ச்சி அறிக்கையைப் பெறுவதன்தன் மூலம் தங்களின் செயல்திறன் சாதனையை வெளிப்படுத்தப் போகின்றன. நல்ல திட்டம்தான். வெற்றி அளிக்குமா? தெரியவில்லை.




# படுகொலைகளின் சாட்சியமே செம்மணி! சர்வதேச விசாரணை நிச்சயம் அவசியம்!!

## தேசிய சமாதான பேரவை வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

"செம்மணிப் புதைகுழியில் இருந்து மீட்கப்படும் என்புக்கூடுகள், படுகொலைகளின் பிரதான சாட்சியங்களாகவே அமைந்துள்ளன. ஆதலால், இந்த விடயத்தில் சர்வதேச விசாரணை அவசியம்."

– இவ்வாறு தேசிய சமாதான பேரவையின் நிர்வாக இயக்குநர் ஜெஹான் பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"இலங்கையில் தமிழர்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்து வாழ்கின்ற நிலையில், செம்மணிப் புதைகுழி விவகாரம் பேசுபொருளாக அமைந்துள்ளது. செம்மணியில் மீட்கப்பட்டுள்ள என்புத் தொகுதிகள் திட்டமிட்ட படுகொலைகளின் சாட்சியங்களாகவே அமைந்துள்ளன.

அரசாங்கங்களை இனியும் நம்புவதற்குத் தமிழ் மக்கள் தயாரில்லை. ஆதலால்தான், அவர்கள் செம்மணிப் புதைகுழி உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் சர்வதேசத்திடம் நீதியைக் கோருகின்றனர். இதில் எந்தத் தவறும் இல்லை.

எம்மைப் பொறுத்தவரை செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுக்காக, வெளிநாடுகளில் இருந்து நடைமுறைச் சாத்தியமான நிபுணத்துவத்தைப் பெறுவது மிகவும் அவசியம். ஆனால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, செம்மணிப் புதைகுழி தொடர்பில் உள்நாட்டுப் பொறிமுறையை ஏற்கும் நிலையில் உள்ளது.

இந்த விடயத்தில், நிபுணத்துவம் மிக்கதும் மிக நேர்மையானதுமான விசாரணைகள் இடம்பெற வேண்டும்."

– என்றார்.

# இளம் தம்பதியர் சுட்டும் வெட்டியும் படுகொலை; கைதான 4 சந்தேகநபர்களுக்கும் விளக்கமறியல்

அம்பாந்தோட்டை, ஹுங்கம பகுதியில் வீடொன்றினுள் 28 வயதான இளம் தம்பதியினர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்ட பெண் ஒருவர் உட்பட 4 சந்தேகநபர்களை எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உயிரிழந்தவர்கள் மீது கூரிய ஆயுதங்களால் தாக்குதலும், துப்பாக்கிச்சூடும் நடத்தப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஹுங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாடிகல ரன்ன பகுதியில், உள்ள வீடொன்றினுள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை வீட்டினுள் அத்துமீறி நுழைந்த குழுவினர் வீட்டில் இருந்த இளம் தம்பதியினரைக் கொடூரமான முறையில் படுகொலை செய்திருந்தனர்.

சம்பவம் தொடர்பில் ஹுங்கம பொலிஸார் மற்றும் தங்காலை குற்ற விசாரணைப் பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் மேற்படி சம்பவம் தொடர்பில் பிரதேசவாசிகள் வழங்கிய தகவலுக்கமைய குற்றச் செயலுடன் தொடர்புடைய பெண் ஒருவர் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

35 வயதுடைய பெண் ஒருவரும், 27 தொடக்கம் 33 வயதுடைய 3 ஆண்களும் விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் ரன்ன பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்தது.

சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேகநபர்களைக் கைது செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கைதான நபர்களிடமிருந்து குற்றச் செயலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட போர் 12 ரக துப்பாக்கி, போர் 12 ரக 2 தோட்டாக்கள் மற்றும் ஒரு வெற்றுத் தோட்டாவும், 2 வெட்டுக் கத்திகளும் மீட்கப்பட்டன.

உயிரிழந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடும், கூரிய ஆயுதங்களால் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளமை பிரதேச பரிசோதனையின் போது தெரியவந்துள்ளது.

போதைப்பொருள் கொடுக்கல் – வாங்கல் தொடர்பில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் கஹந்தமோதர பகுதியில் கடந்த வருடம் மார்ச் மாதம் நபர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் பிரதான சந்தேகநபராகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளமை விசாரணையில் வெளிப்பட்டுள்ளது.

இதேவேளை, சந்தேகநபர்கள் நேற்று அங்குனுகொலபெலஸ்ஸ நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 22ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் எம்.பி.

இப்போது அந்தக் கொள்கைக் கூட்டு கொள்ளைக் கூட்டாய்ப் போய்விட்டது போல தெரிகின்றது.

அந்த கூட்டு கஜேந்திரகுமார் வசம் இருந்து கொள்ளை போய்க் கொண்டிருப்பதாகத் தெரிவதைத்தான் அப்படி குறிப்பிட்டேன்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் இருக்கின்ற விடயத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கேட்பதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரின் சைக்கிள் கட்சியைத் தவிர மற்ற எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒன்றாக இருக்கின்றன என்பதை அப்பட்டமாகவும், வெளிப்படையாகவும், மிகத் தெளிவாகவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் பிரகடனப்படுத்தியமையை அடுத்து, சீறி எழுந்திருக்கின்றார் சைக்கிள் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

தமிழர்களை ஒற்றையாட்சிக்குள் முடக்கவே 13 ஐ வலியுறுத்துகிறது தமிழரசுக் கட்சி என்று அவர் குற்றம் சாட்டுகிறார். வழமை போல நீட்டுப் பட்டோலை வாசிக்கின்றார்.

சரி, தமிழரசு அப்படியே இருந்து விட்டுப் போகட்டும். அவரோடு கொள்கை கூட்டில் இருக்கின்ற ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி எங்கே இருக்கின்றது? அதே 13 ஐ முழு அளவில் நடைமுறைப்படுத்தும்படி தமிழரசை விட மிக வலிமையாக – உறுதியாக – தெளிவாக – முழு வீச்சோடு – அந்தக் கூட்டணியின் கட்சிகள் கேட்கின்றன.

அதற்காக, யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை என்று ஒவ்வொரு இடத்திலும் 13 இன் நடைமுறையாக்கத்தை வலியுறுத்தி அக்கட்சிகள் கருத்தரங்குகள், தொடர் நிகழ்வுகளை நடத்தி வருகின்றன. தமது கொள்கைக் கூட்டாளிகளை (?) அந்த நடவடிக்கையில் இருந்து விலக்குவதற்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. அவை பற்றிய விவரங்களை இன்றைய காலை முரசின் உள்பக்கத்தில் சிவா ராஜ்நாதன் ஒரு கட்டுரையாக விவரித்திருக்கின்றார்.

ஆக, உள்ளூராட்சி தேர்தல் முடிந்ததும் கஜேந்திரகுமார் அமைத்த கொள்கைக் கூட்டு இப்போது அவர் வசம் இருந்து கொள்ளை போய்க் கொண்டிருக்கின்றது என்பதுதான் உண்மை.

அப்படி இருந்தும் 13ஐ அதிகம் வலியுறுத்தும் தனது கொள்கைக் கூட்டாளிகளை விமர்சிக்காமல், தமிழரசை பாய்ந்து விழுந்து விமர்சிக்கிறார் கஜேந்திரகுமார். அது அவரது பரவணிப் பழக்கம். மாற்ற முடியாதது.

சிவா ராஜ்நாதன் தமது கட்டுரையில் குறிப்பிடுவது போல அதற்கு 'சுமந்திரன் போபியா' என்ற நோயும் கஜேந்திர குமாரைப் பீடித்திருப்பது காரணமாக இருக்கக்கூடும்....!

\+ \+ \+

மன்னார் காற்றாலைகள் அமைப்புக்கு எதிராகப் போராடிய பல தரப்புகளும் இப்போது என்ன செய்வது என்ற குழப்பத்தில் இருப்பார்கள் என நினைக்கிறேன்.

இந்த விடயத்தில் விட்டுக் கொடுக்கவே முடியாது, தொடர்ந்து போராடுங்கள் என்று போராட்டக்காரர்களை உசுப்பி விட்டு, வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்ட மன்னார் ஆயர் இரண்டு, மூன்று வாரங்கள் கழித்து நாடு திரும்பி, தொடர்ந்து உசுப்பேற்றலை பேணிய பின்னர், இப்போது சத்தம் சந்தடியின்றி, ஜனாதிபதியுடன் போய்ப் பேசி இணக்கத்துக்கு வந்துவிட்டார் என்று கூறப்படுகிறது.

இணக்கம் காணப்பட்டு இரண்டு நாள்களாகியும் அது பற்றிய தகவல் போராட்டக்காரர்களுக்கும், ஊடகங்களுக்கும் வெளியிடப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்தப் போராட்டத்தை இடை நடுவில் சற்று, மடை மாற்றி, சாதகமாக முன்னெடுப்பதற்கு வழி இருந்தது. ஜனாதிபதிக்கு நெருக்கமான சில தரப்புகள், பெருமளவில் நிதி செலவழித்து கணிசமான பணிகள் முடிவுற்ற நான்கு காற்றாலைகளை தொடர்ந்து அமைக்கவும், மற்றைய பத்தையும் மன்னாரத் தீவுக்கு வெளியில் இடம் மாற்றவும் ஒரு சமரச யோசனையை முன் வைத்துப் பேச முற்பட்டன

அதை பரிசீலனைக்குக் கூட ஏற்காமல், தொடர்ந்து போராடுவோம் என்று மார்தட்டியவர்கள் இப்போது என்ன செய்யப் போகின்றார்கள் என்பதுதான் கேள்வி.

இதுவரை அரசுக்கு எதிராக போராடியவர்கள், இனி போராட்டத்தை தொடர்வதற்காக மன்னார் ஆயர் இல்லத்துக்கு முன்னால்தான் போய் நிற்க வேண்டிய நிலைமை வந்துள்ளது.

போராட்டங்களை தந்திரமான கட்டங்களில், தந்திரோபாயமான முறைகளில், இடை நிறுத்தி, மடை மாற்றி புதிய வியூகங்களை அமைப்பது பல சமயங்களில் அவசியமானது. அதில் தவறுவோமேயானால் முதலுக்கே மோசம் ஆகி விடும்....!

# பொலிஸாரைக் கண்டு தப்பியோடிய நபர் ரயிலுடன் மோதுண்டு பரிதாப உயிரிழப்பு



பொலிஸாரால் கைது செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காகத் தப்பியோடிய சந்தேகநபர் ரயில் மோதி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

பல்வேறு வழக்குகளில் நீண்டகாலமாகத் தேடப்பட்டுவரும் சந்தேகநபர் ஒருவரை, கடந்த முதலாம் திகதியன்று கைது செய்வதற்கு பொலிஸார் முயன்றுள்ளனர். இதையடுத்து, அந்தச் சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காகத் தப்பியோடியுள்ளார். இதன்போதே, நாவற்குழிப் பகுதியில் ரயிலுடன் மோதுண்டுள்ளார்.

படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

## மன்னார் கடற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கடற்படைத் தளத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இன்று காலை கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் ஊடாக மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் அவர்கள் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரும் தமிழகத்தின் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக் கடற்படையினரால் மடக்கிப் பிடிக்கப்பட்ட IND-TN-10-MM-378 இலக்கப் படகில் 8 மீனவர்களும், IND-TN-10-MM-200 இலக்கப் படகில் 8 மீனவர்களும், IND-TN-10-MM-748 இலக்கப் படகில் 7 மீனவர்களும், IND-TN-10-MM-1002 இலக்கப் படகிலும் 7 மீனவர்கள் என 30 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## அநுர அரசு இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
குறித்து இன்று விசேட அறிக்கை ஒன்றை அநுர அரசு வெளியிடவுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம், அது தொடர்பில் அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு தொடர்பான விடயங்களை உள்ளடக்கியதாக அந்த அறிக்கையை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இன்று நாடாளுமன்றத்தில் வெளியிடுவார்.

இந்தத் தகவலை அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மன்னார் காற்றாலைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு விட்டது என்றும், 14 காற்றாலைகளையும் தொடர்ந்து அமைப்பதற்கு இணக்கம் ஏற்பட்டுள்ளது என்றும் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற வளாகத்தில் வன்னி மாவட்ட சிரேஷ்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைச் சந்தித்துச் சுருக்கமாக உரையாடிய சமயம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார் என்றும் அறிய வந்தது.

இதற்கு இடையில் மன்னாரில் ஏற்கனவே 30 காற்றாலைகள் அமைக்கப்பட்டமையால் நீரோட்டங்களில் ஏற்பட்ட பாதிப்பு, வெள்ளத்தை அகற்றுவதில் ஏற்பட்டுள்ள நெருக்கடி ஆகியவை குறித்து ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று மன்னாரில் இன்று நடைபெற இருப்பதாகத் தெரிகின்றது.

அதேசமயம், மன்னாரில் கனிய மணல் அகழ்வது தொடர்பான விடயத்திலும் சிக்கல் நீடிக்கும் நிலையில் அது தொடர்பான அரச உயர்மட்டக் கூட்டம் ஒன்று நாளை கொழும்பில் நடைபெற இருப்பதாகத் தெரியவருகின்றது.

மன்னாரில் காற்றாலைகள் அமைப்பது தொடர்பில் ஜனாதிபதியோடு இணக்கம் ஒன்று காணப்பட்டிருப்பதாகக் கொழும்பில் தெரிவிக்கப்பட்டாலும், அந்தக் காற்றாலை அமைப்புக்கு எதிராகப் போராடி வருகின்ற பொதுத் தரப்புகளுக்கு அது பற்றிய தகவல் இன்னமும் தெரிவிக்கப்படவில்லை என்று ஒரு செய்தி வட்டாரம் குறிப்பிட்டது.

## ஜெனிவா விவகாரம் தொடர்பான

# சாணக்கியனின் கேள்விகளுக்கு பதிலளிக்காமல் நழுவிய பிரதமர்

## இரண்டு வார கால அவகாசம் கோரினார்






ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்வைக்கப்பட்ட இலங்கை தொடர்பான அறிக்கை குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்று நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்க பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய இரண்டு வார கால அவகாசம் கோரிய நிலையில், ஜெனிவாவில் தாம் எடுத்த நிலைப்பாடு தொடர்பில் பதிலளிக்க முடியாமல் இருப்பதனாலேயே இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்காமல் அரசாங்கம் நழுவிச் செல்கின்றது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற அமர்வில் பிரதமருடனான கேள்வி நேரத்தின் போது பிரதமரிடம் கேள்விகளை முன்வைத்த சாணக்கியன் எம்.பி.,

“ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வருடாந்தக் கூட்டத் தொடரில் மனித உரிமைகள் ஆணையாளரால் இலங்கை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு முன்னர் மனித உரிமைகள் ஆணையாளரால் இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட விஜயத்தின் இறுதியில் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டு இலங்கை அரசாங்கம் பல்வேறு துறைகளில் கவனம் செலுத்தப்பட வேண்டிய மற்றும் செயற்படுத்தப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு பிரதமரிடத்தில் சில கேள்விகளை முன்வைக்கின்றேன்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கை தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு மற்றும் அது தொடர்பில் முன்னெடுக்கும் நடவடிக்கை தொடர்பில் இந்தச் சபையில் தெளிவுப்படுத்த முடியுமா?

மனித உரிமைகள் ஆணையாளரால் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை தனித் தனியாக முன்வைத்து, அந்தப் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பில் வேறு சர்வதேச மாற்று யோசனையை பயன்படுத்துவது தொடர்பில் ஆராய்வதற்கான பரிந்துரை தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?” – என்று கேள்வி எழுப்பினார்.

இதன்போது எழுந்து பதிலளித்த பிரதமர் கலாநிதி பிரதமர் ஹறிணி அமரசூரிய,

“நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், இதற்கு முன்னர் வேறு கேள்விகளையே பிரதமரிடத்திலான கேள்வியில் கேட்டிருந்தார். அதற்காகவே நான் தயாராக இருந்தேன். ஆனால், இந்தப் புதிய கேள்விகள் நேற்றைய தினமே (செவ்வாய்க்கிழமை) கிடைத்தது. இதனால் இதற்குப் பதிலளிக்க இரண்டு வார கால அவகாசம் வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.” – என்றார்.

இவ்வேளையில் மீண்டும் எழுந்த சாணக்கியன் எம்.பி.,

“பிரதமர் தயாராக வந்த கேள்விகளுக்கு வேண்டுமென்றால் பதிலளிக்குமாறு கேட்கின்றேன். நான் அனுப்பியிருந்த கேள்விகளை நாடாளுமன்றத்தில் கொள்கைகள் தொடர்பில் கேட்க முடியும் என்று கூறியதால் அந்த கேள்விகளை மாற்றினேன்.” –என்றார்.

இதன்போது ஆளும் கட்சி பிரதம கொறடாவான நளிந்த ஜயதிஸ்ஸ,

“பிரதமரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கே அவர் பதில்களைத் தயாரிக்க வேண்டும். அவர் கேள்விகளுக்குப் பதில்களைத் தயார்படுத்திக் கொண்டிருந்த போது, கேள்விகளை மாற்றியுள்ளீர்கள். புதிய கேள்விகளை முன்வைத்துள்ளமையால் பிரதமரிடத்திலான அடுத்த கேள்வி நேரத்தில் அவர் பதிலளிப்பார். எவ்வாறாயினும் வெளிவிவகார அமைச்சர் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவார்.” – என்றார்.

இவ்வேளையில் மீண்டும் எழுந்த சாணக்கியன் எம்.பி.,

”நான் முதலில் கொடுத்த கேள்விகளை மீளப்பெற்றுக்கொண்டு வேறு கேள்விகளை வழங்கியதாகக் கூறுவது தவறான நிலைப்பாடாகும். நான் முதலில் வழங்கிய கேள்விகள் நிலையியல் கட்டளைக்கு அமைய மாற்ற வேண்டும் என்று கூறியதால் நான் மாற்றினேன். நான் எழுதிக் கொடுத்த கேள்விகளை மாற்றவில்லை. ஏன் அரசாங்கத்தால் இதற்குப் பதிலளிக்க விருப்பமில்லை என்று புரிகின்றது.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் அரசாங்கம் எடுத்த நிலைப்பாடு தொடர்பில் அரசாங்கத்தால் பதிலளிக்க முடியாது. இது முக்கியமான பிரச்சினையாகும். சர்வதேசம் பார்த்துக் கொண்டு இருக்கின்றது. வேலைகள் செய்யாமல் வாக்குறுதிகள் மட்டும் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் நேரத்தில் இந்தக் கேள்விகளில் பிரச்சினை இருப்பதாகக் கூறுவது கேள்வியில் இருந்து நழுவிச் செல்வதாகும். இது அநீதியானது.” – என்றார்.

இதன்போது மீண்டும் பதிலளித்த ஆளும் கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ,

”நாங்கள் கேள்வியில் இருந்து நழுவிச் செல்லவில்லை. இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் சபையில் உரையாற்றுவார்.” – என்றார்.

# ஊழல், மோசடி விசாரணைகளை குழப்புவதே எதிரணியின் நோக்கம்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ விசனம்



"இலங்கையில் ஊழல், மோசடிகள் குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு ஒவ்வொருவராகக் கைது செய்யப்படும் இந்தச் சந்தர்ப்பத்தில், ஆணைக்குழுவின் பணிப்பாளர் மீது எதிர்க்கட்சிகள் விமர்சனங்களை முன்வைக்கின்றன. முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளைக் குழப்புவதே அவர்களின் நோக்கமாகும்."

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"இலஞ்ச, ஊழல் தொர்பான விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் நியமனம் தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு அவரால் பதிலளிக்கப்பட்டுள்ளது. செயற்பாட்டு ரீதியில் அவர் அவரது நடவடிக்கைகளை நாட்டுக்கு வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்.

எனவே, இவ்வாறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்துக் கொண்டிருப்பதால் எவ்வித பிரயோசனமும் இல்லை. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவுக்கு இது குறித்த சட்டம் தொடர்பில் அனுபவம் இருப்பதாக நம்புகின்றோம்.

அதற்கமைய நாடாளுமன்றத்தில் அரசமைப்பு சபையின் ஊடாக இடம்பெற்ற தேர்வு மோசடியானது என்றால், அந்த நியமனத்துக்கு எதிராக நீதிமன்றம் செல்ல முடியும்.

அதுவே சரியான அணுகலாகும். அதனை விடுத்து ஆங்காங்கு விமர்சனங்களை முன்வைத்துக் கொண்டிருப்பதால் எவ்வித பிரயோசனமும் இல்லை.

ஊழல், மோசடிகள் குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு ஒவ்வொருவராகக் கைது செய்யப்படும் இந்தச் சந்தர்ப்பத்தில், இலஞ்ச, ஊழல் தொர்பான விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் மீது அவதூறு பரப்புவதன் ஊடாக, கம்மன்பில போன்றோரின் தேவை என்ன என்பது தெளிவாகின்றது. இலஞ்ச, ஊழல் குறித்த விசாரணைகளைக் குழப்புவதே இவர்களின் நோக்கமாகும்." – என்றார்.

# மலையக மக்களுக்கான இந்தியாவின் உதவிகள் தொடரும்!

## தமிழ் முற்போக்குக் கூட்டணியிடம் தூதுவர் உறுதி



இலங்கைக்கான இந்தியத் தூதுவருக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், பழனி திகாம்பரம் மற்றும் வே. இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்திய வீட்டுத் திட்டம், மலையக மக்களுக்குரிய உரிமைகள் உட்பட முக்கிய சில விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

மலையகச் சமூகத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்துக்கான முயற்சிகளுக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கப்படும் என இதன்போது இந்தியத் தூதுவர் உறுதியளித்தார்.



# செயற்கை நுண்ணறிவு மூலம் தபால் விநியோக முறைமையில் மாற்றங்களைச் செய்வதன் அவசியம்



எம்.எம்.ஏ.முபாறக்,
சாய்ந்தமருது.

வருடாந்தம் ஒக்ரோபர் மாதம் ஒன்பதாம் திகதியை உலக அஞ்சல் தினம் எனப் பிரகடனப்படுத்தி தபால் பரிவர்த்தனையின் ஆதிகால வரலாற்றையும நம் வாழ்வியலில் அது கொண்டிருக்கும் பிணைப்பையும் அதன் முக்கியத்துவப் பண்புகளையும் நாம் விளங்கி வருகிறோம்.

மறுபுறத்தில் தகவல் மற்றும் தொழில்நுட்ப வருகைகள் தபால் விநியோக முறைமையில் எத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிந்து கொள்வதும் அதுபற்றிப் பேசுவதும் அவசியமாகின்றது.

எனவே, நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சியும் டிஜிட்டல் முறைச் செயற்பாடுகளும் தபால் விநியோக முறைமையில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை இக் கட்டுரை விசாரணை செய்கிறது.

வாழ்வில் ஒவ்வொரு அசைவிலும் தவிர்க்க முடியாமல் பங்கு கொண்டிருந்த தபால் சேவையின் இன்றைய நிலை என்ன?

வரலாற்றுக் காலம் தொடங்கி செய்திப் பரிவர்த்தனை முறைமை இடம்பெற்று வந்தாலும் கூட 1635 இல் பிரிட்டனின் ஆங்கிலேய அரசு, ரோயல் மெயில் சேவையை ஆரம்பித்து நவீன தபால் விநியோக முறைமைக்கான அடிக்கல்லை நட்டு வைத்தது.

அதன் தொடர்ச்சியாக சுமார் நூற்றி ஐம்பது வருடங்கள் கடந்த நிலையில் இலங்கை முழுவதும் தபால் விநியோக முறைமை 1815 இல் அமுலுக்கு வந்தது.

அன்றிலிருந்து இன்றுவரை இந்தச் சேவையின் ஒவ்வொரு நகர்வையும் நாம் நன்றாக அறிந்து வைத்திருக்கிறோம்.

பாட்டி போய் விட்டாளா? வயல் காணி விளைச்சல் எப்படி ? செவலயன் குட்டி போட்டதா? என்று ஒரு தபால் அட்டையில் குடும்பத்தின் சகல விவரங்களையும் தெரிந்து கொண்ட ஒரு காலம் அன்று இருந்தது.

தந்தி வந்தாலே போதும் வாசிக்காமலேயே மரணச் செய்தியென்று மயங்கி விழுந்து அழுது புரண்ட காலம் அது.

அரச ஊழியனின் நியமனமும் இடமாற்றமும் ஏன் சம்பளமும்கூட தபால் சேவையின் கைகளிலேயே கட்டுண்டு கிடந்தது.

இவைபோல் பேசுவதற்கு எவ்வளவோ உண்டு. ஆனால் இன்று நிலைமை வேறு. தபால்காரனின் சைக்கிள் மணியோசைக்குக் காத்திருந்த காலம் போய் தொலைபேசியின் அழைப்புக்கு காது கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

பார்சல் சேவையின் பெரும் பகுதியை கூரியர் சேவை பறித்தெடுத்துக் கொண்டது. வாகனங்களின் அசுர வளர்ச்சி போக்குவரத்தில் தாமதங்களை ஏற்படுத்தி காலை நேரக் கடித விநியோகத்தை கஸ்டத்தில் தள்ளியுள்ளது.

மின்னஞ்சல் பாவனையும் இணைய வழி வணிகமும் வருமானத்தைப் பாதித்து அபிவிருத்தியை முடக்கியுள்ளது.

நவீன தொழில் நுட்ப வசதிகளைப்பெற முடியாத நிலையில் கிராமப்புற மக்கள் பெரும் கஷ்டத்தை அனுபவிக்கின்றனர்.

இவற்றுக்கெல்லாம் தபால் திணைக்களம் ஈடு கொடுக்க வேண்டியுள்ளது. நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் வசதிக் குறைபாடுகளிலிருந்து மீண்டெழ வேண்டியுள்ளது.

எனவே பின்வரும் செயற்பாடுகளை தபால்துறை முன்னெடுக்க வேண்டுமென்று இந்தக் கட்டுரை பிரேரிக்கின்றது.

1. தபாலகங்களை அதிநவீன கருவிகள் மூலம் மேம்படுத்துதல்.
2. தபாலகங்களை கணனி மயப்படுத்தி செயல்படுதன்மையின் வேகத்தை அதிகரித்தல்.
3. அரச செலவில் ஊழியர்கள் நவீன தொழில் வாண்மைப் பயிற்சிகளைப் பெற ஊக்குவித்தல்.
4. பணக் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் இணைய வழி ஊடாக இடம் பெறுதல்.

(தற்போது அமுலில் இருக்கும் இணையவழி கொடுக்கல் வாங்கல்களுக்கு மேலதிகமாக இதனை முன்னெடுத்தல்)

5. தபால் திணைக்களத்தின் ஊழியர்களில் பெரும் எண்ணிக்கையினர் விரைவில் ஓய்வு பெறும் நிலையில் உள்ளனர்.

எனவே ஆள்சேர்ப்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளல்.

இவற்றுக்கும் அப்பால் செயற்கை நுண்ணறிவு ஊடாக தபாலக ஊழியங்கள் மேன்மைப்படுத்துதல் இன்றியமையாதது.

6. தபால் தரம் பிரிக்கும் (Automated Sorting ) செயல் முறையில் செயற்கை நுண்ணறிவின் உதவி பெறப் படுதல் .
7. குறைந்த செலவிலும் குறைந்த நேரத்திலும் குறைந்த தூரத்தைப் பயன்படுத்தித் தபால் விநியோகம் செய்யும் முறையை செயற்கை நுண்ணறிவு செயலியிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளுதல்.
8. தபால் திணைக்களத்தில் தற்போது அமுலில் இருக்கும் விரைவுத் தபால் பதிவுத் தபால் மற்றும் பொதிகளின் விநியோகத்தின்போதே பணம் கொடுக்கும் முறை (COD) போன்ற நடவடிக்கைகளில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துதல்.

மேலுள்ளது போன்ற முன்வைப்புகளைச் செயற்படுத்துவதன் மூலம் அடுத்த வருட உலக அஞ்சல் தினத்துக்கு முன்னதாக தளம்பலற்ற சேவை வழங்குநராக தபால் திணைக்களம் தலை தூக்க வாய்ப்புகள் உண்டு.




நாகராசா தனுஸ்காந்
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.

# டிஜிட்டல் யுகத்தின் போக்கில் அஞ்சல் துறையின் புதுமைகள்

அஞ்சல் என்ற சொல் கேட்டவுடன் நம் மனதில் மெல்ல வந்து சேரும் அந்தத் தபால்காரரின் மணி ஒலி, அஞ்சல் உறை, தபால் தலை மற்றும் தபால்காரரின் சைக்கிள் இவை அனைத்தும் நம்மை உணர்ச்சியுடன் இணைக்கும் நினைவுகளைத் தூண்டும். இன்றைய டிஜிட்டல் உலகத்திலும், அஞ்சல் சேவை மனித உணர்வுகளின் பாலமாகத் திகழ்கிறது.

ஆம். ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 9 அன்று உலகம் முழுவதும் உலக அஞ்சல் நாள் (World Post Day) கொண்டாடப்படுகிறது. இந்த நாள், 1874 ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்தின் பெர்ன் நகரில் உருவாக்கப்பட்ட யூனிவர்சல் போஸ்டல் யூனியன் (Universal Postal Union - UPU) என்ற உலகளாவிய அஞ்சல் அமைப்பை நினைவுகூரும் வகையில் கொண்டாடப்படுகிறது. 1969 ஆம் ஆண்டு ஜப்பானில் நடைபெற்ற UPU மாநாட்டில் அக்டோபர் 9 உலக அஞ்சல் நாளாக அறிவிக்கப்பட்டது.

### அஞ்சல் சேவையின் வரலாறு

மனித சமுதாயத்தில் தகவல் பரிமாற்றத்தின் பழமையான வழிமுறையாக அஞ்சல் துறை திகழ்கிறது. ஆரம்ப காலங்களில் தூதர்கள் மூலம் தகவல் அனுப்பப்பட்டன. பின்னர் குதிரை, வண்டி, கப்பல் மற்றும் விமானம் வழியாக வளர்ச்சி பெற்றது. இலங்கையில் அஞ்சல் சேவை 1798 ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டது. பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் கோட்டை (ஊழடழஅடிழ) நகரம் மையமாகக் கொண்டு அஞ்சல் நிலையங்கள் திறக்கப்பட்டன. 1815 இல் முதல் முறை தபால்காரர் சேவை தொடங்கப்பட்டது. 1857 இல் முதன்மை அஞ்சல் நிலையம் (General Post Office) திறக்கப்பட்டது. இன்றும் கோட்டை பீழு இலங்கையின் அஞ்சல் வரலாற்றின் அடையாளமாக திகழ்கிறது.

### 2025 ஆம் ஆண்டிற்கான தலைப்பு (Theme)

"Empowering Communities through Innovation in Postal Services" (புதிய புதுமைகள் மூலம் சமூகங்களை வலுப்படுத்தல்) இந்த தலைப்பு, அஞ்சல் துறை நவீன தொழில்நுட்பத்தை ஏற்று சமூக வளர்ச்சியை ஊக்குவிக்கும் விதமாக மாற்றம் பெற வேண்டியதைக் குறிக்கிறது.

அஞ்சல் ஊழியர்கள் – சமூகத்தின் மறைக்கப்பட்ட வீரர்கள்

அஞ்சல் ஊழியர்கள் தினமும் வெயிலும் மழையிலும் கடிதங்களை, பத்திரங்களை, பணத்தை மக்களிடம் சேர்க்கின்றனர். இலங்கையில் பல தூரமான கிராமப்புறங்களில் அஞ்சல் ஊழியர் ஒருவர்தான் மக்களுக்கு அரசாங்கத் தகவல், தேர்வு அறிவிப்பு அல்லது பண உதவி கடிதம் கொண்டுசெல்லும் ஒரே முகம். அவர்களின் பணி ஒரு சமூக சேவையாகவே கருதப்படுகிறது.

### இலங்கையின் அஞ்சல் துறையின் பங்களிப்பு

இலங்கை தபால் துறை (Department of Posts – SriLanka Post) இன்று 200 ஆண்டுகளுக்கும் மேலான வரலாறு கொண்டது. நாடு முழுவதும் 4,600க்கும் மேற்பட்ட அஞ்சல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. கிராமப்புறங்களிலிருந்து நகரங்கள் வரை கடிதம், பணம், ஆவணங்கள், பார்சல் ஆகியவற்றை கொண்டு சேர்க்கும் பணி அஞ்சல் ஊழியர்களால் சிறப்பாக நிறைவேற்றப்படுகிறது.

இலங்கை தபால் துறை வழங்கும் முக்கிய சேவைகள்:

# ஸ்பீட் போஸ்ட் (Speed Post)
# இ-போஸ்ட் (e-Post)
# மணி ஓடர் (Money Order)
# பார்சல் ட்ராக்கிங் (Parcel Tracking)
# தபால் சேமிப்பு வங்கி (Postal Savings Bank)

மேலும், சமீபத்தில் e-commerce மற்றும் ஒன்லைன் பார்சல் விநியோக சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. "Sri Lanka Philatelic Bureau" வழியாக நாட்டின் வரலாறு, பண்பாடு, சுற்றுலா இடங்கள் போன்றவற்றைச் சித்திரிக்கும் அழகான தபால் தலைகள் வெளியிடப்படுகின்றன.

இன்றைய உலகம் முழுவதும் தகவல் பரிமாற்றம், வணிகம், கல்வி, சேவை உள்ளிட்ட அனைத்து துறைகளும் டிஜிட்டல் மாற்றம் அடைந்துள்ளன. அதே போல், இலங்கை தபால் துறையும் (Sri Lanka Post) தனது பாரம்பரிய சேவைகளை நவீன தொழில்நுட்பத்துடன் இணைத்து, மக்களுக்கு வேகமான மற்றும் நம்பகமான சேவைகளை வழங்கும் நோக்கில் பல புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

தொடர்ச்சி▼

# டிஜிட்டல் யுகத்தின் போக்கில் அஞ்சல் துறையின் புதுமைகள்

தொடர்ச்சி▲

### நடமாடும் அஞ்சல் நிலைய சேவை Mobile Post Office Service

இலங்கையின் பல கிராமப்புறங்கள் இன்னும் நிலையான அஞ்சல் நிலையங்களிலிருந்து தூரமாக உள்ளன. அந்தப் பகுதிகளுக்கும் தபால் சேவையை எளிதாக கொண்டு சேர்க்கும் நோக்கில், "Mobile Post Office Service" என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த வாகனங்கள் அஞ்சல் நிலையம் போலவே செயல்பட்டு, கடிதங்கள், பார்சல்கள், பணம் அனுப்புதல் போன்ற அனைத்து சேவைகளையும் வழங்குகின்றன. இது "அஞ்சல் சேவை உங்கள் வாசலுக்கு" என்ற கொள்கையின் அடையாளமாக பார்க்கப்படுகிறது.

### QR கோடு மற்றும் பார்சல் கண்காணிப்பு முறை (Parcel Tracking System)

முன்பு ஒரு பார்சல் எங்கு உள்ளது என்பதை அறிய பெரும் சிரமம் இருந்தது. ஆனால் தற்போது ஒவ்வொரு பார்சலுக்கும் தனித்தனியான QR கோடு அல்லது Tracking Number வழங்கப்படுகிறது. இதனை ஸ்கேன் செய்தாலோ அல்லது நிகழ்நிலை உள்ளீடு செய்தாலோ, பொருளின் இருப்பிடம், விநியோக நேரம் உள்ளிட்ட தகவல்கள் உடனடியாக கிடைக்கின்றன. இது தெளிவான (Transparent) மற்றும் பொறுப்பான (Accountable) சேவையாக மாறியுள்ளது.

### நிகழ்நிலை தபால் கட்டணம் மற்றும் சேவை முன்பதிவு (Online Postal Payments & Bookings)

இன்றைய வாடிக்கையாளர்கள் நேரம் சேமிக்க விரும்புகின்றனர். இதை கருத்தில் கொண்டு, இலங்கை தபால் துறை ஒன்லைன் தளங்கள் (Web Portals) மற்றும் மொபைல் Apps மூலம் தபால் கட்டணம் செலுத்தல், பார்சல் முன்பதிவு போன்ற வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த வசதி மூலம் மக்கள் தங்கள் வீடு, அலுவலகம், அல்லது மொபைல் வழியாகவே அனைத்து தபால் பணிகளையும் செய்ய முடிகிறது.

### டிஜிட்டல் முகவரி அடையாளம் (Digital Address ID System)

இலங்கையில் சில இடங்களில் முகவரி முறைபடுத்தல் சிக்கலாக இருந்ததால், துல்லியமான விநியோகம் சிரமமாக இருந்தது. இதைத் தீர்க்க, தபால் துறை Digital Address Identification System எனும் புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளது. ஒவ்வொரு வீட்டுக்கும் தனித்த குறியீடு (Unique Code) வழங்கப்படும். இதன் மூலம், அஞ்சல் ஊழியர்கள் GPS வழியாக அந்த முகவரியை எளிதில் கண்டுபிடிக்க முடிகிறது. இது அஞ்சல் சேவையில் சரியான விநியோகத்தையும் நேர்மையையும் உறுதிசெய்கிறது.

### e-Commerce விநியோக சேவைகள் (E-Commerce Delivery Services)

இணையத்தின் வளர்ச்சியால், மக்கள் அதிக அளவில் நிகழ்நிலை வணிகம் (Online Shopping) மேற்கொள்கின்றனர். இதனால் தபால் துறையும் E-Commerce Distribution Network என்ற புதிய சேவையை தொடங்கியுள்ளது. இதன் மூலம் நாட்டின் எந்த பகுதியிலிருந்தும் வணிக நிறுவனங்கள் தங்கள் பொருள்களை வாடிக்கையாளர்களிடம் விரைவாக அனுப்ப முடிகிறது. இந்த சேவை Amazon, Daraz, Kapruka, Ikman.lk போன்ற நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறது.

### E-Post மற்றும் Digital Communication Service

புதிய தலைமுறையை நோக்கி, "e-Post" என்ற டிஜிட்டல் மின்னஞ்சல் வடிவ சேவையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசு அலுவல்கள், கல்வி நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் ஆகியவை ஆவணங்களை பாதுகாப்பாக அனுப்ப முடிகிறது. இது பாதுகாப்பான மற்றும் சட்டரீதியான தகவல் பரிமாற்றத்திற்கு பெரும் பங்களிப்பாக அமைந்துள்ளது.

### பசுமை தொழில்நுட்பம் மற்றும் சுறுசுறுப்பு சேவை (Green & Smart Postal Network)

இலங்கை தபால் துறை தற்போது சுற்றுச்சூழல் நட்பு முயற்சிகளையும் முன்னெடுத்து வருகிறது.

மின்சார மோட்டார் சைக்கிள்கள் (Electric Motorbikes), சூரிய ஆற்றல் பயன்பாடு (Solar Power Systems), காகித பயன்பாட்டை குறைக்கும் டிஜிட்டல் ஆவண முறை (Paperless Office) இவை அனைத்தும் தபால் துறையை சுற்றுச்சூழல் நட்பாக மாற்றுகின்றன.

### எதிர்கால நோக்கு (Future Vision)


இலங்கை தபால் துறை எதிர்காலத்தில் Block-chain Technology பயன்படுத்தி பாதுகாப்பான ஆவண பரிமாற்றம், AI (Artificial Intelligence) மூலம் விநியோக நேரம் கணிப்பு, Drone Delivery System மூலம் தூர்ந்த இடங்களுக்கு பார்சல் அனுப்பல் போன்ற திட்டங்களை பரிசீலனை செய்து வருகிறது.

### அஞ்சல் சேவையின் மனிதநேய பக்கம்

அஞ்சல் என்பது வெறும் கடிதப் பரிமாற்றம் அல்ல – அது உணர்ச்சி, பாசம், நினைவுகள் எனப் பல வகையில் மனித மனங்களை இணைக்கும் பாலம். ஒரு சிறிய கடிதம் கூட ஒருவர் மனதை மகிழ்விக்கும் சக்தி உடையது. மின்னஞ்சல், சமூக ஊடகம் வளர்ந்தாலும், கையெழுத்தில் எழுதப்பட்ட கடிதத்தின் உணர்வை எந்த டிஜிட்டல் ஊடகமும் அளிக்க முடியாது.

உலக அஞ்சல் நாள் என்பது நமது சமூகத்தின் தொடர்புத் தளங்களை வலுப்படுத்தும் நாள். தொழில்நுட்பம் எவ்வளவு வளர்ந்தாலும், அஞ்சல் துறையின் நம்பிக்கையும் நெருக்கமும் அழிவதில்லை. இலங்கையில் அஞ்சல் துறை இன்னும் மக்கள் வாழ்க்கையில் உறுதியான இடத்தினை பெற்றுள்ளது.

இருப்பினும் டிஜிட்டல் உலகத்தில் இந்த அனைத்து புதுமைகளும் அஞ்சல் துறையை பழமையான கையெழுத்து கடித காலத்திலிருந்து, நவீன டிஜிட்டல் உலகத்தின் வேகமான தகவல் பரிமாற்றக் காலத்திற்குக் கொண்டு வந்துள்ளன. இலங்கை தபால் துறை, பாரம்பரியத்தின் நம்பிக்கையையும், தொழில்நுட்பத்தின் திறமையையும் இணைத்து, "அஞ்சல் – பாசத்தின் பாலம், தொழில்நுட்பத்தின் திறவுகோல்" என்ற புதிய அடையாளத்தை உருவாக்கியுள்ளது.




# தகவல் பரிமாற்றத்தின் நீண்ட வரலாற்றில் தபால் சேவை முக்கியமான இடத்தில்!

ஜெகன் ஹிமாத்ரி,
மூன்றாம் வருடம்,
ஊடகக் கற்கைகள்,
யாழ். பல்கலைக்கழகம்.

ஒவ்வொரு ஆண்டும் ஒக்ரோபர் 9 அன்று உலகம் முழுவதும் உலக தபால் தினம் கொண்டாடப்படுகிறது. தகவல் பரிமாற்றத்தின் நீண்ட வரலாற்றில் தபால் சேவை ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. பழங்காலத்தில் மக்கள் புகை, புறா, தூதர் போன்ற வழிகளில் செய்திகளை பரிமாறினர். பின்னர் எழுத்து உருவானதும் கடிதம் அனுப்பும் பழக்கம் பரவலானது. தபால் சேவை என்பது மனித உணர்வுகளை இணைக்கும் அன்பின் பாலம். இன்று இணையம், மின்னஞ்சல், சமூக ஊடகங்கள் உலகை ஆக்கிரமித்திருந்தாலும், தபால் சேவை தனது மரபையும் நம்பகத்தன்மையையும் காக்கிறது. இந்த நாள் உலக நாடுகள் தபால் சேவையின் வளர்ச்சியையும் அதன் பங்களிப்பையும் நினைவு கூறும் நாளாகக் கொண்டாடுகின்றன. உலக தபால் தினம் தபால் சேவையின் சமூக பங்களிப்பை மக்களிடையே எடுத்துக்கூறும் விழிப்புணர்வு நாளாகும். உலக தபால் சங்கம் நிறுவப்பட்ட நாளை நினைவுகூறும் வகையில் உலக தபால் தினம் கொண்டாடப்படுகிறது. 1874 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 9 அன்று சுவிஸ் பெர்ன் நகரில் இந்த அமைப்பு உருவானது. தபால் சேவைகள் உலகளவில் ஒரே தரப்படுத்தலின் கீழ் இயங்க வேண்டும் என்பதே அதன் நோக்கம். பின்னர் 1969 இல் ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்ற தபால் மாநாட்டில், ஒக்டோபர் 9 அன்று உலக தபால் தினம் என அறிவிக்கப்பட்டது. அதன் பிறகு வருடந்தோறும் உலக நாடுகள் இந்த நாளை பெருமையுடன் கொண்டாடி வருகின்றன. இதன் மூலம் தபால் சேவையின் மதிப்பு மேலும் உயர்ந்தது.

உலக தபால் சங்கம் தபால் சேவையின் இதயமாகத் திகழ்கிறது. இது உலகம் முழுவதும் உள்ள நாடுகளை இணைத்து, அஞ்சல் சேவைகளின் விதிமுறைகள், கட்டணங்கள், விநியோகங்கள் போன்றவற்றை ஒரே ஒழுங்கில் கொண்டு வருகிறது. தற்போது 190 இற்கும் மேற்பட்ட நாடுகள் இதில் உறுப்பினர்களாக உள்ளன. தபால் விதிகளை ஒரே மாதிரியாக்குதல், சர்வதேச அஞ்சல் நேரம் மற்றும் கட்டண ஒற்றுமை, தர மேம்பாடு போன்ற பணிகள் இதன் முக்கிய பங்களிப்புகளாகும். அரசியல் எல்லைகளை மீறி உலக மக்களை இணைக்கும் கருவியாக தபால் சேவை வளர்ந்ததற்கு இந்த அமைப்பே காரணம்.

### வரலாற்றுப் பாதை

மனித சமூகம் தோன்றிய காலம் முதலே தகவல் பரிமாற்றம் தொடங்கியது. ,ந்தியாவில் மௌரிய பேரரசர் சந்திரகுப்த மௌரியர் காலத்தில் தபால் போக்குவரத்து அமைப்பு இருந்தது. தமிழ் நாட்டில் சோழர்கள், பாண்டியர்கள், செங்குட்டுவன் போன்ற அரசர்கள் தங்கள் அரசாணைகளை தூதர்கள் அல்லது புறாக்கள் மூலம் அனுப்பினர். பின்னர் அஞ்சல் முத்திரைகள், அஞ்சல் பெட்டிகள் அறிமுகமான போது தபால் சேவை மக்களின் வாழ்க்கையில் ஒரு பகுதியாகப் பதிந்தது. தபால்காரர் ஒரு குடும்பத்தின் நம்பிக்கை நாயகனாக மாறினார். ஒவ்வொரு வீட்டுக்கும் மகிழ்ச்சி, துக்கம், நம்பிக்கை அனைத்தையும் தபால்காரர்தான் கொண்டு சென்றார்.

தபால் சேவை காலத்துக்கு ஏற்ப பல மாற்றங்களை கண்டது. ஆரம்பத்தில் புறாக்கள் மூலம் அனுப்பிய தகவல்கள், பின்னர் ரயில், கப்பல், விமானம் வழியாக சென்றன. 1840 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் வெளியான “பென்னி பிளாக்” என்ற முத்திரை உலகின் முதல் தபால் முத்திரையாகும். அதனைத் தொடர்ந்து பல நாடுகள் தங்களுக்கே உரிய முத்திரைகளை வெளியிட்டன. 20 ஆம் நூற்றாண்டில் ஸ்பீட் போஸ்ட், மனி ஆர்டர், பார்சல் சேவை, அஞ்சல் பாக்கெட் போன்ற புதிய சேவைகள் அறிமுகமாகின. இன்று தபால் சேவை தன்னை டிஜிட்டல் மாற்றங்களுக்கு ஏற்ப புதுப்பித்துள்ளது. ஆன்லைன் கண்காணிப்பு, மின்னணு கட்டண சேவைகள், விரைவான விநியோக முறை ஆகியவை இதன் நம்பகத்தன்மையை மேலும் உயர்த்தியுள்ளன.

உலக தபால் தினம் தபால் சேவையின் மனிதாபிமான பங்களிப்பை நினைவூட்டுகிறது. தபால் மனிதர்களை இணைத்தது, உறவுகளை வளர்த்தது, பண்பாடுகளை பரவச் செய்தது. கல்வி, வணிகம், அரச நிர்வாகம், குடும்ப உறவுகள் ஆகிய அனைத்திலும் தபால் சேவை முக்கிய பங்கு வகித்தது. குறிப்பாக கிராமப்புறங்களில் தபால்காரர் மக்கள் மற்றும் அரசாங்கத்தை இணைக்கும் ஒரே பாலமாக இருந்தார். தபால் நிலையங்கள் ஒரு ஊரின் வளர்ச்சியின் அடையாளமாக இருந்தன. இன்றைய காலத்தில் தகவல் பரிமாற்றம் முழுவதும் டிஜிட்டல் வடிவத்தில் உள்ளது. மின்னஞ்சல்,

தொடர்ச்சி▼

# தகவல் பரிமாற்றத்தின் நீண்ட வரலாற்றில் தபால் சேவை முக்கியமான இடத்தில்!

தொடர்ச்சி▲

வாட்ஸ்அப், சமூக ஊடகங்கள் தபால் சேவைக்கு சவாலாக இருந்தாலும், தபால் துறை தன்னை தொழில்நுட்ப ரீதியாக மாற்றியுள்ளது.

இணைய அஞ்சல், விரைவு விநியோகம், மின்னணு பணப் பரிமாற்றம், ஆன்லைன் சேவை போன்ற பல வசதிகள் இதன் மூலம் அறிமுகமாகின. இதனால் தபால் துறை இன்றும் மக்களின் நம்பிக்கையைப் பெற்றே இயங்குகிறது. அரசு மற்றும் தனியார் நிறுவனங்களும் தபால் துறையின் நம்பகத்தன்மையை மதித்து அதன் சேவைகளை பயன்படுத்துகின்றன.

இன்றைய நவீன உலகில் ஒன்லைன் தபால் சேவை அல்லது இணையவழி அஞ்சல் சேவை நமக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என்றே சொல்லலாம். தபால் நிலையத்துக்குச் சென்று நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய தொல்லைகளை இந்தச் சேவை முற்றிலுமாக நீக்கிவிட்டது. ஒன்லைன் தபால் சேவையின் முதல் மற்றும் பெரிய நன்மை என்னவென்றால், அது நமக்குத் தரும் வசதியும் நேர சேமிப்பும்தான். ஒரு தபாலை அனுப்பவோ அல்லது ஒரு சேமிப்புக் கணக்கைத் தொடங்கவோ நாம் இப்போது தபால் நிலையத்துக்குப் போக வேண்டியதில்லை. வீட்டில் இருந்தபடியே, அல்லது எங்கிருந்தபடியேனும் நமது மொபைல் அல்லது கணினி மூலமாகச் சில நிமிடங்களில் எல்லாக் காரியங்களையும் முடித்துவிடலாம். குறிப்பாக வேலைக்குச் செல்பவர்களுக்கும், அவசரமாகச் செய்ய வேண்டிய காரியங்களுக்கும் இது மிகப் பெரிய உதவி. பணம் கட்டுவது, இன்சூரன்ஸ் செலுத்துவது போன்ற பல சேவைகளையும் எப்போதும் நம்மால் அணுக முடிகிறது.

தபால் அனுப்பிய பிறகு அது எங்கே இருக்கிறது என்று தெரிந்துகொள்ள இனி கவலைப்படத் தேவையில்லை. ஒன்லைன் சேவையில், நாம் அனுப்பும் கடிதம் அல்லது பார்சலை எளிதாகக் கண்காணிக்க முடியும். ஒரு கண்காணிப்பு எண் நமக்குக் கிடைத்துவிடும். அதைப் பயன்படுத்தி, நமது பொருள் எந்தெந்த இடங்களில் இருக்கிறது, எப்போது போய் சேரும் போன்ற விவரங்களை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம். இதனால், அஞ்சல் இழப்பு பற்றிய பயம் குறைவதுடன், ஒருவித பாதுகாப்பு உணர்வும் நமக்குக் கிடைக்கிறது. தபால் துறையின் ஒன்லைன் சேவைகளால் மக்களுக்கு வங்கிச் சேவைகள் எளிதில் கிடைக்கின்றன. வங்கிக் கிளைகள் இல்லாத ஊர்களில்கூட, அஞ்சல் ஊழியர்கள் கையடக்கக் கருவிகளைப் பயன்படுத்தி மக்களுக்குப் பணம் செலுத்துதல், பணம் எடுத்தல், சேமிப்புக் கணக்கு தொடங்குதல் போன்ற சேவைகளை அவர்களின் வீட்டுக்கு சென்று வழங்குகிறார்கள். இது கிராமப்புற மக்களின் நிதிச் சேர்க்கைக்கு ஒரு மாபெரும் பங்களிப்பாகும்.

ஒன்லைன் சேவை மூலம் தபால் துறையின் பல கவர்ச்சிகரமான சேமிப்பு மற்றும் காப்பீட்டுத் திட்டங்களைப் பொதுமக்கள் எளிதாகப் பயன்படுத்த முடிகிறது. அஞ்சல் ஆயுள் காப்பீடு போன்ற திட்டங்களில் ஒன்லைனில் பிரீமியம் செலுத்துவது, புதிய திட்டங்களில் இணைவது எனப் பலவற்றை இப்போது விரல் நுனியிலேயே செய்து முடிக்கலாம். இது உத்தரவாதமான வருமானம் மற்றும் குறைந்த பிரீமியத்துடன் நிதிப் பாதுகாப்பை உறுதி செய்கிறது. சுருக்கமாகச் சொன்னால், ஒன்லைன் தபால் சேவை என்பது நம்முடைய வாழ்க்கையை மிகவும் எளிதாகவும், வேகமாகவும், பாதுகாப்பாகவும் மாற்றியமைக்கும் ஒரு நவீனப் பாலமாகும்.

உலக தபால் தினம் என்பது வெறும் நினைவு நாள் அல்ல அது மனித உறவுகளின் நாள். தபால் சேவை மனிதர்களை இணைக்கும் அன்பின் சின்னம். கடிதங்கள் வழியாக மகிழ்ச்சி பகிரப்பட்டது, கனவுகள் அனுப்பப்பட்டன, உறவுகள் வளர்ந்தன. தொழில்நுட்பம் எவ்வளவு வளர்ந்தாலும் தபால் சேவை மனித உணர்வுகளின் அடையாளமாகவே தொடரும். இந்த நாளில் தபால்காரர்கள், தபால் ஊழியர்கள் மற்றும் தபால் துறையின் உழைப்பை கௌரவிப்பது நமது கடமையாகும். ஒவ்வொரு ஒக்ரோபர் 9 ஆம் திகதியும் மனிதர்களை இணைக்கும் அந்த அன்புச் சேவையை நினைவு கூறும் சிறப்பான நாளாகவே திகழ்கிறது.

# ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுடன் எதிர்க்கட்சி தலைவர் கலந்துரையாடல்





அரசாங்கம் இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறைமையை இடைநிறுத்த எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் தலைமையிலான விசேட பிரதிநிதிகள் குழுவுடனான சந்திப்பில் தெளிவுபடுத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரேனோ ஆகியோருக்கிடையில் நேற்று கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

போட்டி விதிமுறைகளுக்கு இணங்குதல், தற்போதைய அரசாங்கம் இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறைமையை இடைநிறுத்த எடுத்து வரும் நடவடிக்கைகள், நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாண்மையாளர்கள் எதிர்கொள்ளும் பல சவால்கள் தொடர்பில் இந்த சந்திப்பின் போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.






# நிந்தவூரில் கடலரிப்பு அச்சுறுத்தல்

**(பாறுக் ஷிஹான்)**

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் கரையோரப் பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக கடல் அரிப்பு அதிகரித்து வருகின்றது. இதனைத் தடுக்க இதுவரை காத்திரமான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என பாதிக்கப்பட்ட மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நிந்தவூர் பிரதேசத்தில் கடல் அரிப்பை நிரந்தரமாகத் தடுக்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும், தற்போது தற்காலிகமாக கடல் அரிப்பை தடுக்க கடற்கரை பகுதியில் மண் மூடைகளினால் பாதுகாப்பு சுவர் அமைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பாதிக்கப்பட்ட மீனவர்களின் மீன்வாடிகளை வேறு பிரதேசங்களுக்கு மாற்றுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள்ளப்படும் எனவும் மாவட்ட கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்கள அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் வந்து பார்த்து விட்டு வாக்குறுதிகளை வழங்கி விட்டு சென்ற போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

கடல் அரிப்பினால் மீன்பிடி வாடிகள் பாதிப்புற்று கடல் ஊடறுத்து செல்வதனால் கரையோரத்திலுள்ள 40 க்கும் அதிகமான தென்னை மரங்களும் அழிந்துவிடும் அபாய நிலைமை ஏற்பட்டு வருகின்றது.

கடல் அரிப்பின் காரணமாக கடலோரப் பகுதிகள் கடலுக்குள் ஆழ்ந்து வருகின்றன. மனித வாழ்விடங்களுக்கும் உள்கட்டமைப்புகளுக்கும் கடல் அரிப்பு பெரும்பாதிப்பை ஏற்படுத்துகிறது. அத்துடன் கடற்கரையோரம் உள்ள நகரப்பகுதிகள், பாலங்கள், வீடுகள் மற்றும் பிற கட்டடங்கள் சேதமடைகின்றன.

இதேவேளை நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பை தடுப்பதற்கான கருங்கல்லிலான அணைக்கட்டு நிர்மாணிப்பதற்கு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தால் கடந்த காலங்களில் முதல் கட்டமாக பல மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது.
















# ஊழல் தடுப்பு, எதிர்ப்புச் சட்டம் தொடர்பாக திருமலையில் நேற்று உள்ளூராட்சி தரப்பினருக்கான விசேட செயலமர்வு

(ஏ.எச்.ஹஸ்பர்,எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சிமன்ற தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் தொடர்புடைய அதிகாரிகளுக்கான ஊழல் எதிர்ப்புச் சட்டம் மற்றும் நேர்மை குறித்த தேசிய நிகழ்ச்சித் தொடர் நேற்று திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர, இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திசாநாயக்க ஆகியோரின் தலைமையில் இந்த நிகழ்ச்சித் திட்டம் இடம் பெற்றது.

இதில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் நாமல் தலங்கம, இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் நாயகம் திருமதி. தனுஜா பாலசூரிய, பிரதிப் பிரதம செயலாளர் (பணியாளர் மற்றும் பயிற்சி) மணிவண்ணன் மற்றும் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சிப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.















# திருகோணமலையில் துறைமுக அதிகார சபைக்கு உரித்தான காணிகளில் வசிக்கின்ற 4,672 குடும்பங்களுக்கு விடிவுகாலம்

## அவற்றை அவர்களுக்கே விடுவித்து வழங்க நடவடிகை எனத் தகவல்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவில், துறைமுக அதிகார சபைக்கு உரித்தான காணிகளில் வசிக்கும் 5000 குடும்பங்களில் 4,672 குடும்பங்களுக்கு அவர்கள் குடியிருந்து வரும் காணிகளை வழங்குவதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது என்று நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன தகவல் தெரிவித்துள்ளார்.

பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட,11 கிராம அலுவலர் பிரிவுகளில் இலங்கை துறைமுக அதிகார சபைக்குரிய காணிகளில் 5000 குடும்பங்கள் நீண்ட காலமாக வசித்து வருகின்றன.

துறைமுக அதிகாரசபைக்குச் சொநதமான இக்காணிகளை பொதுமக்களுக்கு விடுவிப்பதற்கான பிரேரணையை நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அதன்படி கிராம சேவகர் பிரிவுகளான லிங்கநகர், பூம்புகார், மட்கோ, சிங்கபுர, சுமேதங்கரபுர, கவட்டிக்குடா, வெள்ளைமணல், நாச்சிக்குடா, சீனக்குடா,கப்பல்துறை மற்றும் முத்துநகர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் 4672 குடும்பங்களுக்கான காணிகளை விடுவிப்பதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதன்படி நீண்டகாலமாக துறைமுக அதிகார சபைக்குரிய காணிகளில் வாழ்ந்து வந்தவர்களின் காணிக்கான உரித்து பிரச்சினைகள் தீர்க்கப்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

# உலக குடியிருப்பு தினத்தினை முன்னிட்டு மாணவர்களின் ஓவியங்களின் கண்காட்சி












(அஷ்ரப் ஏ சமத்)

தேசியவீடமைப்புஅபிவிருத்திஅதிகார சபை இவ் வருடம் உலக குடியிருப்பு தினத்தினை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே "அழகான வீடு" எனும் தலைப்பில் ஓவியம் வரைந்து அனுப்பும் போட்டியை நடாத்தியது.

அதற்கு நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலை மாணவர்கள் 4,500 க்கும் அதிகமான ஓவியங்களைவ் வரைந்து அனுப்பியிருந்தனர். அதில் தெரிவு செய்யப்பட்ட 200க்கும் மேற்பட்ட ஓவியங்கள் கொழும்பு பொது நூலகத்தின் கூட்ட மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்டன.

இக் கண்காட்சியை வீடமைப்பு பிரதிய மைச்சர் பி.வி சரத் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் அரவிந்த் சிறிநாத், பொது முகாமையாளர் பொறியியலாளர் கே. ஜானகக ஆகியோர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைத்தார்கள். இக் கண்காட்சியை கொழும்பு பிரதேசத்தில் உள்ள மாணவர்கள் பார்வையிட்டனர். இன்று 09 ஆம் திகதியும் இக்கண்காட்சி காலை 09.30 தொடக்கம் பி.ப 03.00 மணி வரை நடைபெறவிருக்கின்றது.




# மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு ஆளுநரின் தலைமையில் குழு விஜயம்

## பல்வேறு அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க நடவடிக்கை

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வடமாகாண ஆளுநர் என்.வேதநாயகன் தலைமையில் விசேட குழுவினர் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக நேற்றுப் புதன்கிழமை காலை விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது வைத்தியசாலையில் புனரமைக்கப்பட்ட வைத்திய பரிசோதனை நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டமையைத் தொடர்ந்து விசேட கூட்டம் இடம் பெற்றது.

இதில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை அபிவிருத்திக் குழொ பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

மேலும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், மன்னார் பொது வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர், உதவி பிராந்திய சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டமையோடு,வடமாகாண ஆளுநருடன் வடமாகாண பிரதம செயலாளர்,வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர்,வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்,வடமாகாண கட்டடங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

இதன் போது வைத்தியசாலையில் உள்ள பல்வேறு குறைபாடுகள் குறித்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்களால் ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

குறிப்பாக தேவைகள் மற்றும் வைத்தியசாலையில் உள்ள அதிகமான கட்டடங்கள் பழமை வாய்ந்த கட்டடங்களாக உள்ளமையினால் அவற்றை மாற்றி அமைத்தல் மற்றும் நவீன வசதிகளை ஏற்படுத்துதல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.

மேலும் நோயாளிகள் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள், அதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. இதன் போது இந்திய அரசின் நிதி உதவியுடன் வைத்தியசாலையில் அமைக்கப் படவுள்ள கட்டடம் குறித்தும் ஆளுநர் வைத்தியசாலை நிர்வாகத்தினருடன் கலந்துரையாடினார்.

மேலும் மாகாண நிதியில் இருந்து திட்டம் ஒன்றை வகுத்து 2026 ஆம் ஆண்டுக்கான நிதியில் இருந்து 3 மாடிக் கட்டடம் ஒன்றை அமைக்க நிதி ஒதுக்கவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் அடுத்த வருட நிதியில் இருந்து சீ.டி.ஸ்கான் இயந்திரம் ஒன்றையும், மேலும் சில உபகரணங்கள் கொள்வனவு செய்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் வைத்தியர்களுக்கான விடுதி , வைத்தியசாலைக்கான ஆளணி உள்ளிட்ட சில பிரச்சினைகள் குறித்து ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க துரித நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார்.

மேலும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ள அனைத்து பிரச்சினைகளையும் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்போம் என வடமாகாண ஆளுநர் தெரிவித்தார்.

மேலும் மன்னாரில் காற்றாலை செயல்திட்டம் குறித்து ஆளுநரிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பிய நிலையில் அதற்கு பதில் வழங்கினார்.

காற்றாலை விடயம் பேசி தீர்க்கப்பட வேண்டும். அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் என்ன என்று கலந்துரையாட பட வேண்டும். எங்களுக்கு என்ன தேவைகள் உள்ளது என்பது குறித்து கலந்துரையாட முடியும். எனவே கலந்துரையாடல் மூலம் இப்பிரச்சினைக்கான முடிவை பெற்றுக்கொள்ள முடியும்.- என அவர் மேலும் தெரிவித்தார்.













# சுயநல அரசியல் மட்டுமே கஜேந்திரகுமாரின் பாதை

## தமிழர் ஒற்றுமைக்காக அதனை விட்டு அவர் வர வேண்டும்



ராஜ் சிவநாதன்

தமிழர் ஒற்றுமை மிக அவசியமான இந்த நேரத்தில், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் அரசியல் சூழல் இன்னும் பிளவுபட்ட நிலையிலேயே உள்ளது.

பெரும்பாலான தமிழ் அரசியல் கட்சிகள், முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழ் கட்சிகள், சில தெற்கத்திய ஜனநாயக குழுக்களுடன் இணைந்து மாகாண சபைத் தேர்தல்களை விரைவில் நடத்தவும் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவும் ஒருமனதாக கோரிக்கைகளை முன்வைத்து வரும் நிலையில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி (TNPF) அந்தக் கூட்டுப் பணிகளில் இருந்து விலகி நிற்கிறது.

கஜேந்திரகுமார் தொடர்ந்து மாகாணசபை அமைப்பையும் பதின்மூன்றாவது திருத்தத்தையும் எதிர்த்து வந்துள்ளார். மாகாண சபைகளுக்கு ஆதரவாக விளம்பரப் பிரசாரம் செய்யக்கூடாது என ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணிக்கு (DTNA) அழுத்தம் கொடுத்து வருகிறார். அவரது இந்நிலைப்பாடு தமிழ் அரசியலுக்குள் புதிய பதற்றங்களை உருவாக்கி, ஒருங்கிணைந்த தமிழ் முன்னணியை உருவாக்கும் முயற்சிகளுக்குத் தடையாக மாறியுள்ளது.

இந்த பிளவுகளின் விளைவுகள் சமீபத்திய நிகழ்வுகளில் தெளிவாகக் காணப்பட்டன. சுரேஷ் பிரேமசந்திரன் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். ஏற்பாடு செய்த முதல் கூட்டம் யாழ்ப்பாணம் டில்கோ ஹோட்டலில் நடத்தப்பட இருந்தபோது, கஜேந்திரகுமார் நிகழ்ச்சி ஏற்பாட்டை தடுப்பதற்கு முனைந்திருந்தார் எனக் கூறப்படுகிறது. அப்படியிருந்தும் வெற்றிகரமாக அது நடந்து முடிந்தது. அதனைத் தொடர்ந்து, வவுனியாவில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த இரண்டாவது கூட்டத்தையும் தடுக்க முயற்சித்தும் கூட பலன் கிடைக்கவில்லை. கூட்டம் வெற்றிகரமாக நடந்து முடிந்தது. DTNA தலைவர்கள் செல்வம், சித்தார்த்தன் மற்றும் சுரேஷ் ஆகியோருடன் ணுழழஅ வழியாக நடந்த கலந்துரையாடலில், எந்தச் சரியான காரணமோ அல்லது மாற்று யோசனையோ கூறாமல், கஜேந்திரகுமார் கூட்டத்தை ஒத்திவைக்கவே கோரியமையால் அவரின் அந்த முயற்சியும் பயனின்றி போயிற்று. அவருடைய எதிர்ப்புகள் எந்தக் கொள்கை வேறுபாடையும் அல்லாது, சுமந்திரனை எதிர்த்த தனிப்பட்ட பகைமைக்கே அடிப்படையாக இருந்தன.



வவுனியா நிகழ்ச்சியில் சுமந்திரன் மற்றும் சத்தியலிங்கமும் பங்கேற்றிருந்தமையும் தமிழ் அரசியலில் மாகாணசபை மூலம் ஒற்றுமையை வெளிப்படுத்தியதுடன், மக்களிடையே நம்பிக்கையையும் மீட்டெடுத்தது. அதேபோன்று, வரும் அக்டோபர் 12 ஆம் தேதி திருகோணமலையில் மிகப்பெரிய பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. கஜேந்திரகுமார் பிரிவைத் தவிர்த்து அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்து உள்ளூராட்சி மற்றும் அரசமைப்பு உரிமைகளை மீட்டெடுக்கும் நோக்கில் பங்கேற்கவுள்ளனர். இது பெரும்பாலான தமிழ் தலைவர்களின் உறுதியையும், நடைமுறை அரசியலின் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்துகிறது.

கஜேந்திரகுமாரின் எதிர்ப்பின் மையப்புள்ளி, சுமந்திரனுக்கு எதிரான தனிப்பட்ட விரோதமே

தொடர்ச்சி▼

# சுயநல அரசியல் மட்டுமே கஜேந்திரகுமாரின் பாதை

## தமிழர் ஒற்றுமைக்காக அதனை விட்டு அவர் வர வேண்டும்

தொடர்ச்சி▲

என தெளிவாக தெரிகிறது. சுமந்திரனை தமிழ் அரசியலிலிருந்து விலக்க வேண்டும் என்ற அவரது பரிந்துரையை னுவுயு தலைவர்கள் தீவிரமாக நிராகரித்துள்ளனர். இதனை அவர்கள் பிளவை உருவாக்கும் மற்றும் அழிவு தரும் கோரிக்கை யாகவே குறிப்பிடுகின்றனர். DTNA-வில் சிறிய கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும், அவர்கள் அனைவரும் மாகாணசபைத் தேர்தல்களுக்கும் பதின்மூன்றாவது திருத்தத்திற்கும் ஒருமித்த ஆதரவை வழங்கி வருகின்றனர். அதேவேளை, TNPF தேர்தலில் போட்டியிடும் நோக்கத்தைக் கொண்டிருந்தாலும், அரசாங்கத்தை தேர்தலை நடத்த அழுத்தம் கொடுக்காத நிலைப்பாடு அதன் அரசியல் நம்பகத்தன்மையைச் சீர்குலைக் கிறது.

கஜேந்திரகுமாரின் அரசியல் நடத்தை சீரற்ற துடன், சுயநலமாக மாறிவிட்டதாக விமர்சகர்கள் வாதிடுகின்றனர். அவர் தன்னை ஒரு தேசியவாதத் தலைவராக முன்வைத்தாலும், ஒருங்கிணைந்த கொள்கைச் செயல்முறைகளை முன்வைப்பதி





லும், தனது கட்சியின் ஜனநாயக அமைப்பை வலுப்படுத்துவதிலும் தோல்வியடைந்துள்ளார். பல பார்வையாளர்கள் அவரது அரசியலை தனிப்பட்ட ஆசைகளும் குடும்ப ஆதிக்கமும் நிர்ணயிக்கின் றன என்று கருதுகின்றனர். புலம்பெயர் நிதிகள் வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள பின்தங்கிய சமூகங்க ளுக்கு பயன்படாமல், ஒரு வெளிப்படையான அரசி யல்உருவத்தைத்தக்கவைத்திருக்கமட்டுமேபயன்ப டுத்தப்படுவதாக குற்றச்சாட்டுகளும் தொடர்கின் றன.

இது தமிழ் அரசியலுக்கான ஒரு தீர்மானிக்கும் தருணமாகும். பெரும்பாலான தமிழ், முஸ்லிம் மற்றும் மலையகக் கட்சிகள் மாகாணசபைத் தேர்தல்களை நடத்தவும் பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவும் ஒருமித்த ஆதரவை வழங்கும் நிலையில், ஒரே ஒரு பிரிவின் தடையான அணுகுமுறை கூட்டுத் தமிழ் முன்னேற் றத்தையேதடம்புரளச்செய்கிறது. வரும்திருகோண மலை மாநாடு ஒற்றுமையையும் ஜனநாயக பங்கேற்பையும் வெளிப்படுத்தும் ஒரு முக்கிய மான வாய்ப்பாகும்.

தமிழ் மக்கள் இனி பிளவுகள், அவநம்பிக்கை, மற்றும் தவறவிட்ட வாய்ப்புகளின் சுழற்சியைத் தாங்க முடியாது. இந்த முக்கியமான தருணத்தில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது அரசி யல் பாதையை ஆழமாக சிந்திக்க வேண்டும். அவர் சுயநல அரசியலை விட்டு விலகி, ஒற்றுமை மற்றும் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்ப முயலும் மற்ற தமிழ் தலைவர்களின் பணிகளை தடுக்காமல் இருக்க வேண்டும். அவர் கூட்டுத் தமிழ் இலட்சியத்துடன் தன்னை இணைக்க முடியாவிட் டால், அரசியலிலிருந்து ஓய்வு பெற்று தனது உடல் நலம் மற்றும் நல்வாழ்வில் கவனம் செலுத் துவது அவருக்கும் சமூகத்திற்கும் நன்மை பயக் கும்.

தமிழ் அரசியலுக்கு இன்றைய தேவை, பிளவை உருவாக்கும் அகங்கார அரசியல் அல்ல – ஒருங்கிணைந்த, பொறுப்பான மற்றும் ஒத்துழைப்பான தலைமைத்துவமே. அனைத்து தமிழ் அரசியல் தலைவர்களும் ஒரே சக்தியாக இணைந்து தங்கள் மக்களின் நீண்டகால ஆசைக ளையும் இலட்சியங்களையும் முன்னேற்ற வேண்டிய காலம் இது. மக்கள் மனதை புண்படுத் தும் தேவையற்ற சொற்களும் பிரிவினைக் களங்களும் நிறுத்தப்பட வேண்டும்.



# காசா தாக்குதலை கண்டித்து சட்டப்பேரவையில் தீர்மானம்

## தமிழக முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு







"காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலை உடனே நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். வருகின்ற சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில், காசாவில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலைக் கண்டித்து தீர்மானம் கொண்டு வரப்படும்."

– இவ்வாறு தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை எழும்பூரில் மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலை நிறுத்தக்கோரி இந்த கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழக முதல்வர் ஸ்டாலினும் கலந்து கொண்டார். இதன்போது அவர் உரையாற்றுகையில்,

"காசா மீது இஸ்ரேல் நடத்தும் கண்மூடித்தனமான தாக்குதல்கள், நம் எல்லோருடைய மனதை இன்றைக்கு உலுக்கிக் கொண்டிருக்கிறது. நம்முடைய மனது மட்டுமல்ல, உலகத்தையே இன்றைக்கு உலுக்கிக் கொண்டிருக்கிறது.

பாலஸ்தீன மக்களுக்கு நம்முடைய மனிதாபிமான, மனித உரிமை ஆதரவை மனப்பூர்வமாக நாம் வழங்குகிறோம். இதுதான் இந்தக் கண்டன இயக்கத்தின் முழக்கமாக அமைந்திருக்கிறது. கடந்த ஓராண்டாகவே, காசாவில் இஸ்ரேல் நடத்திக் கொண்டிருக்கக்கூடிய தாக்குதல்கள் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இதுவரையில், ஏறக்குறைய 11ஆயிரம் பெண்கள், 17 ஆயிரம் குழந்தைகள், 175 பத்திரிக்கையாளர்கள், 125 ஐ.நா. ஊழியர்கள் என்று, 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

26 ஆயிரம் குழந்தைகள் பெற்றோர்களை இழந்திருக்கிறார்கள். ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் காயம் ஏற்பட்டு மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் சுருக்கமாக சொல்ல வேண்டும் என்றால், ஓராண்டில் காசாவின் பெரும்பகுதி அழிக்கப்பட்டு விட்டது. ஆனாலும், இஸ்ரேல் நாட்டின் ஆக்கிரமிப்பு கொள்கைக்கு எதிராக, பாலஸ்தீன மக்கள் தொடர்ந்து போராடிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் கொடுமைகளுக்கு ஒரு சிறிய எடுத்துக் காட்டுச் சொல்ல வேண்டும் என்றால், கடந்த ஜுன் மாதத்தில், பட்டினியால் வாடக்கூடிய பாலஸ்தீனர்கள், உணவுப் பொருள் ஏற்றி வரும் லொறியை எதிர் பார்த்துக் காத்திருந்தபோது, 45 பேரை இஸ்ரேல் இராணுவம் சுட்டுக் கொன்றது. உணவுக்காக காத்திருந்தவர்களின் உயிரையே பறித்திருக்கக்கூடிய இந்தக் கொடூரத்தை பார்த்து, எல்லோருடைய இதயமும் நொறுங்கி போயிருக்கிறது.

இந்த நேரத்தில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த செய்தியை உங்களிடம் நான் பகிர்ந்து கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எதிர்வரும் 14 ஆம் திகதி, தமிழக சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் நடைபெற இருக்கிறது. இந்தக் கூட்டத்தொடரில், காசாவில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதலைக் கண்டித்தும், அங்கு உடனடியாக போர் நிறுத்தம் தேவை என்பதை வலியுறுத்தியும், அதற்கான முயற்சிகளை இந்திய அரசு எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வைத்தும், சட்டப்பேரவையில் தீர்மானம் கொண்டு வரப்படும்.

இந்தத் தீர்மானம் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பதாக இருக்கும். அரசியல் வேறுபாடுகளைக் கடந்து, அனைத்துக் கட்சியினரும் இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பார்கள் என்று நான் முழுமையாக நம்புகிறேன்." என்று தெரிவித்தார்.

# இந்தியாவுக்கு விஜயம் செய்தார் பிரித்தானிய பிரதமர் ஸ்டார்மர்

## பிரதமர் மோடியுடன் இன்று சந்திப்பு

பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில் பிரித்தானிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயமாக இந்தியா சென்றுள்ளார்.

மும்பை விமான நிலையத்தில் அவரை, மகாராஷ்டிர ஆளுநர் ஆச்சார்ய தேவ்விரத், முதல்வர் தேவேந்திர ஃபட்னவிஸ், துணை முதல்வர்கள் ஏக்னாந் ஷிண்டே, அஜித் பவார் ஆகியோர் நேற்று வரவேற்றனர்.


பிரித்தானிய பிரதமராக கெய்ர் ஸ்டார்மர் இந்தியா வருவது இதுவே முதல்முறை. அவருடன் பிரித்தானிய அமைச்சர்கள் மற்றும் வர்த்தகக் குழுவினரும் இந்தியா சென்றுள்ளனர்.


கெய்ர் ஸ்டார்மரை வரவேற்று பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,



"முன் எப்போதும் இல்லாத அளவுக்கு மிகப் பெரிய வர்த்தகக் குழுவுடன் இந்தியாவுக்கு முதல்முறையாக வருகை தந்துள்ள பிரதமர் கெய்ர் ஸ்டார்மரை வரவேற்கிறோம். பரஸ்பரம் வலுவான, வளமான எதிர்காலத்துக்கான பகிரப்பட்ட நமது தொலைநோக்குப் பார்வையை முன்னெடுத்துச் செல்வதற்கான இன்றைய சந்திப்பை எதிர்நோக்குகிறேன்." என குறிப்பிட்டுள்ளார்.

# வேதியியலுக்கான நோபல் பரிசு 3 பேருக்கு அறிவிக்கப்பட்டது






2025 ஆம் ஆண்டு நோபல் பரிசுக்கான அறிவிப்புகள் வெளியாகியுள்ளன.

அதன்படி நேற்று 2025ஆம் ஆண்டுக்கான வேதியியலுக்கான நோபல் பரிசு 3 பேருக்கு அறிவிக்கப்பட்டது.

சுசுமு கிடகாவா, ரிச்சர்ட் ராப்சன், ஓமர் எம். யாகி ஆகிய 3 பேருக்கு வேதியியல் துறைக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது.

உலோக – கரிம கட்டமைப்புகளின் வளர்ச்சி கண்டுபிடிப்பிற்காக அவர்கள் 3 பேருக்கும் நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஜேர்மனியில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர் ஐரிஸ் ஸ்டால்ஸருக்கு கத்திக்குத்து





ஜேர்மனியில் புதிதாக தெரிவு செய்யப்பட்டபெண்மேயர்கத்திகுத்துதாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜேர்மனியில் உள்ள ரூர் பிராந்தியத்தில் ஹெர்டெக்கே நகரில் புதிய மேயராக ஐரிஸ் ஸ்டால்ஸர் என்பவர் தேர்தெடுக்கப்பட்டார்.

இவர் மேயராக கடந்த ஒரு வாரத்திற்கு முன்பே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்தநிலையில், வடக்கு ரைன் வெஸ்ட்பாலியா நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில், அவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் உடலின் பல இடங்களில் கத்திக்குத்து காயங்களுடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

இவர் சமூக ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த சில நாள்களில் பதவியேற்கவிருந்த நிலையில், அவர் மீது மர்மநபர்கள் கத்தியால் குத்தி தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

வீட்டிற்கு வந்த சில ஆண்கள் தன் தாயை தாக்கி கத்தியால் குத்தினர் என அவருடைய 15 வயது வளர்ப்பு மகன் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், வளர்ப்பு மகனை சந்தேகத்தின் பெயரில் பொலிஸார் விசாரணைக்கு அழைத்துச் சென்றுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் தீபாவளிக்கு அரசு விடுமுறை வழங்க அனுமதி

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் தீபாவளி தினம், இனி விடுமுறை பட்டியலில் சேர்க்கப்படுவதாக அம்மாகாண ஆளுநர் கவின் நியூசம் அறிவித்துள்ளார்.

இது இந்தியாவின் தீபாவளி பண்டிகையை, விடுமுறையாக அதிகாரபூர்வமாக அங்கீகரித்த அமெரிக்காவின் மூன்றாவது மாகாணமாகும்.

ஏற்கனவே 2024 இல் பென்சில்வேனியாவும், 2025 இல் கனெக்டிகட் மாகாணங்கள் தீபாவளியை அரசு விடுமுறையாக அதிகாரபூர்வமாக அங்கீகரித்திருந்தன.

இந்த விடுமுறை மூலம் அரசு பொதுக் கல்லூரிகள், பாடசாலைகள் மற்றும் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் சம்பளத்துடன் விடுமுறை வழங்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக கடந்த செப்டம்பர் மாதம் கலிபோர்னியாவின் சட்டப்பேரவையின் இரு அவைகளிலும் தீபாவளியை அரசு விடுமுறையாக அறிவிக்கும் "ஏபி 268" என்ற சட்டமூலம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டமூலம் ஆளுநர் கவின் நியூசம் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து தீபாவளியை அதிகாரபூர்வ விடுமுறையாக அறிவிக்கும் "ஏபி 268" என்ற சட்டமூலத்துக்கு கவின் நியூசம் ஒப்புதல் அளித்துக் கையெழுத்திட்டுள்ளார்.





# இன்றைய ராசி பலன்கள் -09.10.2025




இன்று அதைரியம் உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். மனதில் நம்பிக்கையும் உறுதியும் கொள்ளுங்கள். எதிர்மறை எண்ணங்களை நீக்கி நேர்மறை எண்ணங்களை மேற்கொள்ளுங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. திட்டமிட்டு பணியாற்றுவது நல்லது.

மனக்குழப்பம் காரணமாக கோபமான மன நிலையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் இருவரிடையே மகிழ்ச்சி பாதிக்கப்படும்.

இன்று தேவையற்ற செலவுகள் செய்ய நேரும். இது உங்களுக்கு சுமையாக தெரியும்.

பதட்டம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியமாய் இருக்க உடற் பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.




இன்று உங்களுக்கு பயன் தரும் நல்ல மாற்றங்களைக் காணலாம். உங்கள் நகைச் சுவை போக்கு காரணமாக நன்மை விளையும்.

வேலை மாற்றம் அல்லது அது தொடர்பான பயணம் காணப்படுகின்றது. உங்கள் முயற்சிக்கு நல்ல பலன் கிடைக்கும்.

உங்களின் மகிழ்ச்சியான நகைச்சுவையான உணர்வை உங்கள் துணையிடம் வெளிப்படுத்தி நல்லுறவை பராமரிப்பீர்கள். உங்கள் துணையும் மகிழ்ந்து பதிலுக்கு அன்பை செலுத்துவார்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். வங்கியில் சிறந்த பண இருப்பை பராமரிப்பீர்கள். .

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. ஆரோக்கியத்தில் பெரிய குறைபாடு காணப்படாது. என்றாலும் உடன் பிறந்தவர் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.




உங்கள் செயல்களை விரைந்து ஆற்றுவீர்கள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு முன்னேற்றகரமான பலன் களை அளிக்கும்.

உங்கள் பணியின் மூலம் நற்பெயர் பெறுவீர்கள். உங்களின் சுய முயற்சி மற்றும் புத்திசாலித்தனம் காரணமாக இது சாத்தியம் ஆகும்.

உங்கள் துணையிடம் நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உங்கள் துணை கைபேசி வாங்கித் தரக் கோருவார். அவரது தேவையை பூர்த்தி செய்வீர்கள்.

நிதி நிலைமை மகிழ்ச்சி தரும் வகையில் செழிப்பாக இருக்கும். இன்று கணிசமான தொகை லாபமாகக் கிடைக்கும்.

பொதுவாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சி மற்றும் மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் மகிழ்ச்சி அடைவீர்கள். உங்கள் செயல்களில் உணர்ச்சி வசப்படுவதைவிட யதார்த்தமாக இருப்பது நல்லது. இன்று அமைதியாக இருக்க வேண்டும்.

எப்பொழுதும் போல பணியாற்றினால் பணியிடத்தில் வெற்றி பெற இயலாது. சிறப்பாக பணியாற்ற உங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். பணியில் தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்தும் மனநிலையில் இருக்க மாட்டீர்கள். உங்கள் துணையிடம் நகைச்சுவை அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று செலவுகள் அதிகமாகக் காணப்படும். உங்கள் செலவுகளை கட்டுப்படுத்தாவிட்டால் அதிக செலவுகளை சமாளிக்க இயலாது.

அசௌகரியம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும். தொண்டை எரிச்சல் காரணமாக ஆரோக்கியம் பாதிக்கப்படலாம்.




உங்களின் வளர்ச்சி மற்றும் வெற்றி குறித்த கவலை காணப்படும். உங்களை நீங்களே ஊக்கப்படுத்திக் கொண்டு முன்னேற விரும்புவீர்கள். இது உங்களுக்கு திருப்திகரமான உணர்வை அளிக்கும்.

பணியிடத்தில் சவால்கள் காணப்பட்டாலும் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் ஒத்துப் போக முடியாத வகையில் கருத்து வேறுபாடு ஏற்படும். எனவே அவருடன் அமர்ந்து அதனை தீர்த்துக் கொள்வது சிறந்தது.

இன்று செலவுகள் அதிகமாகக் காணப்படும். உங்கள் செலவுகளை கட்டுப்படுத்தாவிட்டால் அதிக செலவுகளை சமாளிக்க இயலாது.

உணர்ச்சிகரமான மனநிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம். எனவே அத்தகைய உணர்வுகளை தவிர்ப்பது நல்லது.




நீங்கள் சிறப்பாக செயல் புரிந்து வெற்றி பெறுவீர்கள். உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்வீர்கள்.

பணியிடத்தில் நன்மை விளையும். உங்கள் திறமையை நிரூபிக்க பல வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் கருத்தை உங்கள் துணையிடம் வெளிப் படையாக கூறுவீர்கள். உங்கள் நம்பிக்கை உணர்வின் மூலம் இது சாத்தியம் ஆகும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சேமிப்பு பழக்கத்தை மேற்கொள்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். திருப்திகரமான, நகைச் சுவை பூர்வமான மனநிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




பிறருடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். இல்லையெனில் நற்பலன்கள் தாமதமாக விளையும். நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

பணியைப் பொறுத்த வரை கூடுதல் முயற்சி எடுக்க வேண்டும். பணி சம்பந்தமான பயணம் மேற்கொள்ள நேரும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற வாக்குவாதங்கள் நடத்துவீர்கள்.எனவே பேசும் போது கட்டுப்பாடு அவசியம்.

இன்று செழிப்பான நிதிநிலைக்கு உகந்த நாள் அல்ல. இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். உங்கள் சம்பாதிக்கும் திறன் குறைந்து காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினை காணப்படும்.




உங்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பதன் மூலம் நீங்கள் பிரச்சினைகளை குறைக்கலாம். கோவிலுக்கு செல்வதன் மூலம் ஆறுதலும் நிம்மதியும் கிடைக்கும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும். எனவே பணிகளை திட்டமிட்டு ஒழுங்கு படுத்திக் கொள்வது சிறந்தது.

நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். உங்கள் துணையுடன் கோபமாக நடந்து கொள்வீர்கள். உங்களிடம் மகிழ்ச்சியான மன நிலை காணப்படாது. இதனால் இருவரிடையே முரண்பாடு ஏற்படும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்ய திட்டமிட வேண்டும்.

கண் தொற்று பாதிப்பு காணப்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

# இன்றைய ராசி பலன்கள் -09.10.2025




இன்று சமநிலையான நாளாக இருக்காது. சில சூழ்நிலைகளை சமாளிப்பதன் மூலம் விஷயங்களை நன்கு புரிந்து கொள்ள இயலும். உங்களுக்கு இழப்புகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் மேலதிகாரிகளுடனான உறவு நல்லுறவாக இருக்காது. மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவதை தவிர்த்திடுங்கள். அவர் சொல்வதைக் கேளுங்கள். இதனால் இருவரிடையே அன்பும் நல்லுறவும் வளரும்.

இன்று பண வரவு அதிகமாக இருக்காது. பணத்தை சேமிக்க வேண்டும். பணத்தை பாதுகாப்பதன் மூலம் இழப்பை தடுக்கலாம்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. கால் வலி உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று பல வாய்ப்புகள் கிடைக்கலாம். அதனை முழுவதுமாக நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

இன்று அர்ப்பணிப்புடன், உங்கள் முயற்சி அனைத்தையும் செலுத்தி சிறப்பாக பணியாற்றுவீர்கள். கடினமான பணிகளையும் எளிதாக முடிக்கும் புரிந்துணர்வு உங்களிடம் காணப்படும்.

உங்கள் மனதில் அன்பு உணர்வு பொங்கிப் பெருகும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று நிதி வளர்ச்சி சமூகமாக இருக்கும். உங்கள் குடும்ப நலனுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். வலிமையுடன் காணப்படுவீர்கள்.




உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்யும் நாளாக அமையும். பணம் அல்லது வேலை தொடர்பான புது முயற்சியில் இன்று நீங்கள் இறங்கலாம்.

உங்கள் பணியில் உற்சாகமான கட்டம். பணிகளை அமைதியாக கையாள வேண்டும். இதன் மூலம் பணியில் வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையான பேச்சை பராமரிபீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். எதிர்கால நலன் கருதி இன்று சிறப்பாக திட்டமிடுவீர்கள்.

இன்று எந்தவிதமான ஆரோக்கியப் பிரச்சினையும் காணப்படாது. இன்று முழுவதும் உற்சாகமாக இருப்பீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய அன்றாட நடவடிக்கைகளில் எச்சரிக்கையான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். இன்று வளர்ச்சிக்கு அனுகூலமான நாள் அல்ல.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பதை கடினமாக கருதுவீர்கள். உங்கள் பணிகளில் தாமதம் காணப்படும். சிறப்பாக பணியாற்ற திட்டமிட்டு பணியாற்றுங்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படாது. நல்லுறவைப் பராமரிப்பதில் தான் உறவின் நிலை சார்ந்துள்ளது. இதன் மூலம் இருவரிடையே உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

குடும்பத்திற்காக தேவையற்ற செலவு ஏற்பட்டு பணம் வீணாகலாம். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். திட்டமிட்டு அதன்படி பணத்தை செலவு செய்யுங்கள்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால் வலி உங்களுக்கு கவலையை அளிக்கும்.




# புறக்கணிப்புக்கு தயாராகும் கிராம உத்தியோகத்தர் சங்கம்

நாடளாவிய ரீதியில் எதிர்வரும் நாள்களில் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளதாகஇலங்கைஐக்கியகிராமஉத்தியோகத்தர் சங்கம் அறிவித்துள்ளது.

குறைக்கப்பட்ட எரிபொருள் கொடுப்பனவை மீள வழங்குதல் உள்ளிட்ட பல வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட உள்ளது.

கொழும்பில்நேற்றுநடைபெற்றசெய்தியாளர் சந்திப்பில் கருத்துரைத்த போதே அந்த சங்கத்தின் தலைவர் நந்தன ரணசிங்க இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அத்துடன்,எதிர்வரும்வரவுசெலவுத்திட்டத்தில் தங்களுக்கான அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வினை முன்வைக்குமாறும் அவர் கோரியுள்ளார்.